# نداء الإسلام



# நிதாஉல் இஸ்லாம்

விலை ரூபா
25/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதாஉல் இஸ்லாம்

இஸ்லாமிய சன்மார்க்க முத்திங்களிதழ்

ஜாமிஆ வெளியீட்டுப் பணியகம்
சொய்ஸாகலை வீதி,
நாவலப்பிட்டி - 20650
இலங்கை.

தொலைபேசி. 0717-877977
054-2223222
0777-877977

**அட்டைப்படம்**

**மேற்கு ஆபிரிக்காவிலுள்ள பார்க்கிலா பாஸு என்ற நாட்டின் தலைநகரான பூபூஜோலாவிலுள்ள அற்புதமான மஸ்ஜிதின் அழகிய தோற்றம்.**

தனிப் பிரதி ரூபாய் 25.00
தபாலில் ரூபாய் 35.00 ஆண்டுச் சந்தா ரூபாய் 150.00

பிரதி தேவையானோர் தயவு செய்து
மணி ஓடர் அனுப்புமாறு வேண்டுகிறோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# نداء الإسلام

مجلة اسلامية

تصدر كل ثلاثة شهور مرة باللغة التاملية

அணி : 14 இரண்டாயிரத்து பதிநான்காம் ஆண்டின் 1435

மணி : 02 இரண்டாம் இதழ் 2014


## இதழின் உள்ளே .....


| | |
|---|---|
| இதழின் இதயம் | 3 |
| வான்மறை விரிவுரை | 4 |
| தேன்மொழித் தெளிவுரை | 9 |
| அரிவையர் அரங்கம் | 18 |
| வரலாற்று வளாகம் | 28 |
| கருத்துக்கினிய கவிதைகள் | 32 |
| ஐயமும் தெளிவும் | 37 |
| பொறுக்கிய முத்துக்கள் | 42 |


இடையிடையே இதயத்துக்கு இதமூட்டும் இனிய நுகர்வுகள்

**உங்கள் சந்தா இலக்கம் :**

COMPLIMENTRY COPY

இவ்வட்டத்தில் சிகப்புநிற அடையாளமிருப்பின் உங்கள் சந்தா முடிவடைந்துவிட்டது என்பதை குறிக்கும். சந்தாவை புதிப்பித்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

குறிப்பு : நிதாஉல் இஸ்லாம் சஞ்சிகையுடன் தொடர்பு கொள்ளும் போது சந்தா இலக்கம் அவசியம் குறிப்பிடுமாறு வேண்டுகிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# نداء الإسلام

வாழ்வு பெறுமதிமிக்கது
வாழத் தெரிய வேண்டும்
திருக்குர்ஆனும் திருநபிவழியும்
வாழ்வை மிளிரச் செய்ய
வழிகாட்டும் ஒப்பற்ற
நூல்கள்.

மனிதனோ ஒரு சோம்பேரி
மனந்திறந்து எதையும்
கற்கமாட்டான்.
வாழ்வு மிளிர வேண்டுமே
என்று எண்ணங்கொள்ளமாட்டான்

ஏதும் நோய் நொம்பலமோ
கஷ்ட துன்பங்களோ நேர்ந்தால்
இது வழமையானதுதானே
என அலட்சியம் செய்வான்.

திருக்குர்ஆன் கூறும் வழியில் நட
அண்ணலாரின் அறிவுரைகளை எடுத்துநட
வாழ்வு மலரும், உள்ளம் மிளிரும்
வாழ்வு செலிக்கும்
இறை திருப்தி கிடைக்கும்
இறையருள் கிட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

بسم الله الرحمن الرحيم

الحمد لله رب العلمين والصلاة والسلام على سيدنا المبعوث رحمة للعالمين
سيدنا ونبينا محمد، وعلى اله واصحابه والتابعين
لهم باحسان الى يوم الدين.

# இதழின் இதயம்

## – அரசியல் –

ஆம்! இன்று அநேகர் அரசியல்பற்றி பேசுவார்கள். சிலர் அதனை நஜீஸ் என்பார்கள். சிலர் அதனை குப்பை என்பார்கள். இன்னும் என்னென்னவோ தகாத வார்த்தைகளால் தூற்றுவார்கள். இதுவெல்லாம் "அரசியல்" என்னவென்று விளங்காதவர்களின் கூற்றாகும்.

மனிதர்கள்தான் அரசியல்வாதிகள். அரசியலில் நல்லதும் உண்டு. கெட்டதும் உண்டு. இது அனைத்திலும் உண்டு. சிலதில் கூடுதலாக இருக்கும். சிலதில் குறைவாக இருக்கும். பொதுவாக "அரசியல் புனிதமானது", அதனை செயல்படுத்தும் முறையைப் பொறுத்தே அனைத்தும் அடங்கியிருக்கிறது.

அதற்கு வித்திட்டவர்கள் இறைதூதர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களே! அதற்குப்பின் நாற்பெரும் கலீபாக்கள். இவர்களின் அரசியல் தொண்டு உலகை செளிக்கச் செய்தது. நல்வாழ்வுக்கு வழிகாட்டியது. மக்கள் மத்தியில் ஒற்றுமை மிளிர்ந்தது. வாழ்வில் நிம்மதி சந்தோஷம் ஏற்பட்டது. அது ஒரு பொற்காலம். பரவசம் நிறைந்த காலம். பொறாமை கிடையாது. போட்டி கிடையாது. சதிமோசங்கள் கிடையாது. சூழ்ச்சிகள் கிடையாது.

இன்றோ, அரசியல் நடத்துகிறார்கள். கட்சிகட்சியாக பிளவுபட்டிருக்கிறார். ஒருவரையொருவர் தாக்கி, ஏசி, திட்டிக்கொள்கிறார். ஒவ்வொருவரும் தான்செய்வதே சரி என எண்ணி, பிறரைமட்டந்தட்டி பேசுகிறார்கள். நாம்தான் சமுதாயத்தொண்டர்கள் எனவும் பேசுகின்றனர். ஆனால் இஸ்லாத்துக்கோ முஸ்லீம்களுக்கோ செய்தது ஒன்றுமில்லை. அதுவும் தேர்தல் என வந்துவிட்டால் முஸ்லிம் வேட்பாளர்கள் நடந்துகொள்ளும் முறையோ மிகவும் மோசமாக இருக்கிறது. அல்லாஹ் தான் இவர்களைப் பாதுகாக்க வேண்டும். தான் ஒரு முஸ்லிம் நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என நபியவர்கள் வழிமுறையை காட்டித் தந்தார்கள், எமது செயல்பாடு எப்படியிருக்க வேண்டும் என்றெல்லாம் சிந்திப்பது கூட இல்லை. ஒரு முஸ்லிம் வேட்பாளருடைய பேச்சு, நடத்தை, செயல்திட்டம் எப்படியிருக்க வேண்டும் என சிந்தியுங்கள் அல்லது கண்ணியமிக்க உலமாக்களிடம் கேட்டு செயல்படும், எதுவுமில்லையென்றால் எதிலும் ஈடுபடாமல் மௌனமாக இருங்கள். அல்லாஹ் உதவி புரிவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பான்மறை விரிவுரை

## கற்சிலைகளெல்லாம் கைகொடுத்துதவுமா?

**"(மனிதர்களாகிய) அவர்கள் அல்லாஹ் அல்லாதவற்றினால் உதவி செய்யப்படலாம் (என்று நம்பி) அவற்றைக் கடவுள்களாக எடுத்துக் கொண்டனர். (ஆனால்) அவையோ அவர்களுக்கு உதவிட இயலாதவையாக இருப்பதுடன் அவர்களுக்கு எதிராக (நரகில்) கொண்டு வந்து நிறுத்தப்படும் படையாகவும் உள்ளன."**

விரிவுரை :
மண்ணுலகில் வாழும் மனித இனம் தனது விருப்பிற்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சிகள் நடப்பதையெண்ணி நிலைகுலைந்து போய் விடுவதுண்டு. தனக்கு மனநிறைவும் மகிழ்ச்சியும் ஊட்டுகின்ற நிகழ்ச்சிகள் மட்டுமே நடைபெற வேண்டுமென்றும் அல்லலும் அதிர்ச்சியும் தருகின்ற நிகழ்ச்சிகள் நடைபெறக் கூடாதென்றும் எதிர்பார்க்கும் மனிதன், எண்ணற்ற தடவை தன் எதிர்பார்ப்பில் ஏமாற்றத்தைக் காண நேரிடும் போது தன் ஐம்புலன் உணர்வுகளுக்கும் அகப்படாமல் – தனக்கு மேல் ஒரு சக்தி இருந்து கொண்டிருக்கிறதென்பதை உணருகிறான். அந்தச் சக்தியின் ஆற்றலுக்கு முன்னால் அஞ்சி நடுங்குகிறான். அந்தச் சக்தியின் உதவியிருந்தால்தான், உலக வாழ்வில் தனக்குத் தேவையான எல்லா நலன்களும் கிடைக்குமென்றும் எல்லாவித இடையூறுகளும் அகலுமென்றும் மனிதன் உறுதியாக நம்பி, அந்தச் சக்தியைப் பணிந்து வணங்குகிறான். கடவுள், இறைவன் ஆண்டவன் என்பன போன்று பொதுப் பெயர்களையோ அல்லது ஒவ்வொரு வகை மனிதப் பிரிவினரும் தனித்தனியான சில குறிப்புப் பெயர்களையோ அந்தச் சக்திக்குச் சூட்டி விடுகின்றனர்.

வானகத்தையும் வையகத்தையும் படைத்து அதில் மனிதன் உள்ளிட்ட எண்ணற்ற உயிரினங்களை அமைத்து, அளப்பரிய பேராற்றலுடன் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் அந்தச் சக்திக்கு "அல்லாஹ்" என்று பெயர் இருப்பதாகவும், அந்த அல்லாஹ்வை மட்டுமே மனிதன் சிரம்பணிந்து வணங்கி இருமைப் பேறுகளையும் அடைய முற்பட வேண்டுமென்றும் முதல் மனிதர் ஆதம் (அலை) அவர்களிலிருந்து தொடங்கி இறுதித் தீர்க்கதரிசி எம்பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்கள் வரையுள்ள ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட தீர்க்கதரிசிகள் மனித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனத்திற்கு அவ்வப்போது எடுத்துரைத்தனர். ஆனால், மனிதர்களில் பெரும்பான்மையினர், எல்லாம் வல்ல ஏகப் பரம்பொருளாகிய அல்லாஹ்வை ஏற்க மறுத்து, அல்லாஹ் அல்லாத பலவற்றைக் கடவுளாக எடுத்துக் கொண்டனர்.

இவ்வாறு, அல்லாஹ் அல்லாதவற்றைக் கடவுள்களாக எடுத்துக் கொண்டவர்கள் "தம்மால் கடவுள்களாக்கப்பட்டவற்றின் மூலம் ஏதாவது உதவி இம்மையிலோ மறுமையிலோ கிடைக்குமென்று, எதிர் பார்க்கிறார்களா? வேண்டாம் இந்த வீண் எதிர்பார்ப்பு!" எனும் கருத்தைத்தான் மேற்கண்ட இரு வசனங்களும் கூறிக் கொண்டிருக்கின்றன. திருமறையில் பல்வேறு வசனங்கள் வாயிலாக, "அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படுபவையனைத்தும் இம்மியும் ஆற்றல் அற்றவை" எனும் கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது. இஸ்லாமெனும் எஃகுக் கோட்டையின் அடித்தளமான **(லாஇலாஹ இல்லல்லாஹ்)** எனும் சொற்றொடரும் இவ்வுண்மையைத்தான் சுட்டிக்காட்டுகின்றது. "அல்லாஹ் அல்லாதவற்றைக் கடவுள்களாக எடுத்துக்கொண்டனர்" **(இத்தஃகதூ மின்தூனில்லாஹி ஆலிஹதன்)** எனும் தொடரிலுள்ள, "கடவுள்களாக" என்ற பொருளைத் தாங்கிய **"ஆலிஹத்தன்"** எனும் சொல், ஆழ்ந்த பொருள் மிக்கதாகும்.

"செயப்படு பொருள்" (Object) இலக்கணத்தில் **"ஆலிஹதன்"** என்று வந்த சொல், எழுவாய் நிலையில் **"ஆலிஹதுன்"** என்று வரும். **"இலாஹுன்"** என்பதன் பன்மைச் சொல்லே **"ஆலிஹதுன்"** என்பதாகும். **இலாஹுன்** என்றால் "வணக்கத்திற்குரியவன்" என்று பொருள். வணக்கத்திற்குரியவன், வல்லமைமிக்கவனாகத்தான் அமைய வேண்டும். வணங்குவோர்களின் வாழ்விற்கும் வளத்திற்கும் வணங்கப்படுபவன் காரணமாக இருந்தாக வேண்டும். வணங்குவோர்களின் வாழ்வில் அலைமோதும் அல்லல்களை அகற்றி ஆறுதலும் ஆனந்தமும் அடைய வணங்கப்படுவோன் வகை செய்ய வேண்டும். இத்தகைய, இயல்புகளனைத்தையும் பெற்று வணங்கப்படும் வற்றாக் கருணையாளன், வல்லவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை.

ஏனெனில், வானங்களையும் பூமியையும் படைத்து, இவற்றிடையே சூரியன் சந்திரன் போன்ற எண்ணற்ற கோளங்களைத் தத்தம் வட்டவரைக்குள் சுற்ற வைத்து, இரவையும் பகலையும் எவ்வித இடைவேளையுமின்றி ஒன்றன் பின் ஒன்றாக மாறி மாறித் தோன்ற வைத்து, உருண்டை உலகை, எறும்பு முதல் யானைவரையுள்ள எண்ணற்ற உயிரினங்கள் உறைவதற்கு வசப்படுத்தி, உயிரினத்தின் ஒளிமகுடமாம் மானிடனுக்கு அனைத்தையும் கட்டுப்பட வைத்து, மானிட இனம் உள்ளிட்ட உயிரினங்களுடனெல்லாம் ஆக்கல், காத்தல், அழித்தல் எனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முச்செயலாலும் தொடர்பு கொண்டிருக்கும் முழு முதற்பொருளான ஆற்றல் உடையவன் அல்லாஹ் மட்டும் தான் என்று அருள்மறைக் குர்ஆன் கூறுகிறது. அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படுகிற கடவுளாகக் கற்பனை செய்யப்படுகிற எவராவது மேற்கண்ட ஆற்றலைப் பெற்றிருப்பதாக எந்த வேத நூலாவது இயம்புகிறதா? இல்லை!

இத்தகைய அல்லாஹ்வை வணங்காமல், எத்தகைய ஆற்றலுமற்ற கற்சிலைகளைக் கடவுள்களெனக் கருதி வணங்குவோர் குறித்து, வேதப் பெரும் நூலாம் குர்ஆனின் விமர்சனம் கீழ்க் ,கண்டவாறெல்லாம் அமைந்துள்ளது.

"மனிதர்களே! உங்களுக்கு, ஓர் உதாரணம் கூறப்படுகிறது. அதைத் கூர்ந்து கேளுங்கள். அல்லாஹ் அல்லாத எவற்றையெல்லாம் நீங்கள் (கடவுளெனக் கருதி உதவிக்கு) அழைக்கிறீர்களோ அவையெல்லாம் ஒன்று சேர்ந்(து) முயற்சித்)த போதிலும் ஓர் ஈயைக் கூடப் படைத்திட முடியாது. (ஈயைப்படைப்பது மட்டுமென்ன!) அவற்றிற்குரிய ஏதாவதொரு பொருளை ஓர் ஈ எடுத்துக் கொண்ட போதிலும் அதனிடமிருந்து அப்பொருளை மீட்கவும் அவைகளால் முடியாது. (ஏனென்றால், அவற்றைக் கடவுள்களென) அழைப்போரும் (கடவுளென்று மற்றவர்களால்) அழைக்கப்படுபவையும் பலவீனர்களே" (குர்ஆன் 22:3)

"எந்தப் பொருளையும் படைக்க சக்தியற்றவையை அவர்கள் (அல்லாஹ்வுக்கு) இணையாக்குகின்றனரா? அவையும் அவனால் படைக்கப்பட்டவைதாம். அவை இவர்களுக்கு எத்தகைய உதவியும் செய்யச் சக்தியற்றவையாக இருப்பதுடன், தமக்குத் தாமே எதுவும் உதவி செய்து கொள்ளவும் சக்தியற்றவையாக இருக்கின்றன. நீங்கள் அவற்றை நேர்வழிக்கு அழைத்த போதிலும், அவை உங்களைப் பின்பற்றா. நீங்கள் அவற்றை அழைப்பதும் அல்லது அழைக்காமல் வாய்மூடி இருப்பதும் உங்களுக்கு ஒன்று போல்தான். (ஏனென்றால் உங்களின் அழைப்பைக் கேட்கும் ஆற்றல் தான் அவற்றிற்கு இல்லையே!)

"நிச்சயமாக அல்லாஹ்வைத் தவிர எவற்றைக் (கடவுள்களெனக் கருதி, உதவிக்கு) அழைக்கிறீர்களோ அவை உங்களைப் போன்ற அடிமைகள்தான். (உங்கள் கோரிக்கைகளை அவை நிறைவேற்றுகின்றன, என்று கூறுவதில்) நீங்கள் உண்மை சொல்பவர்களாக இருந்தால் - அவற்றை நீங்கள் அழைத்துப் பாருங்கள்! உங்களுக்கு அவை பதிலளிக்கட்டுமே! (கற்சிலைகளைக் கடவுளாக்குவோர்களே!) நீங்கள் வணங்கும் அவற்றிற்குக் கால்கள் இருக்கின்றனவே! அதனால் அவை நடக்கின்றனவா? அவற்றிற்குக் கைகள் இருக்கின்றனவே! அவற்றைக் கொண்டு அவை பிடிக்கின்றனவா? அவற்றிற்குக் கண்கள் இருக்கின்றனவே! அவற்றைக் கொண்டு அவை பார்க்கின்றனவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றிற்குக் காதுகள் இருக்கின்றனவே! அவற்றைக் கொண்டு அவை கேட்கின்றனவா? (குர்ஆன் 7:191 – 195)

"அல்லாஹ்வைத் தவிர நீங்கள் வணங்கக் கூடியவற்றை) நீங்கள் அழைத்தால், உங்களின் அழைப்பை அவற்றால் கேட்கவியலா; கேட்(டதாக வைத்துக் கொண்)டாலும் அவற்றால் உங்களுக்குப் பதிலளிக்கவியலா, மறுமை நாளிலோ (அவற்றை) நீங்கள், (அல்லாஹ்வுக்கு) இணையாக்கியதையும் அவை மறுத்துவிடும். அனைத்தும் அறிந்த (இறை)வனைப் போல் அந்தக் கடவுளர்கள் எதையுமே உங்களுக்கு அறிவிக்கா." (குர்ஆன் 35:14)

"(அல்லாஹ்வாகிய) அவனைத் தவிரவுள்ளவற்றைப் பாதுகாப்பாளர்களாக நீங்கள் எடுத்துக் கொள்கிறீர்களா? அவை, தமக்குத் தாமே எவ்வித நன்மை தீமையும் செய்யச் சக்தியற்றவையாக இருக்கின்றன"

(குர்ஆன் 13:16)

"அல்லாஹ் அல்லாதவற்றைக் (கடவுளெனக் கருதி உதவிக்கு) அழைப்பவனை விட மிகவும் வழி கெட்டவன் யார்? யுக முடிவு நாள் வரை (அவற்றை அழைத்த போதிலும்) இவர்களுக்கு அவை பதிலளிக்கா. தம்மை இவர்கள் அழைப்பதைக் கூட அவை உணரவியலா. (ஏனென்றால் அவையெல்லாம் உயிரற்ற ஜடப் பொருட்களன்றி வேறல்ல".

(குர்ஆன் 46:5)

"அல்லாஹ்வைத் தவிர (வேறு கடவுள்கள் இருப்பதாக) நீங்கள் எண்ணிக் கொண்டிருக்கிறீர்களே! அவற்றை நீங்கள் (உங்களின் அல்லல்களை யகற்ற) அழைத்துப் பாருங்கள்! (அவ்வாறு அழைத்தால்) உங்களுடைய எந்தக் கஷ்டத்தையும் நீக்கிவைக்கவோ (அல்லது) தட்டிவிடவோ அவை இயலாதவை (என்று உணர்வீர்கள்.) இவர்கள் (கடவுள்களெனக் கருதி உதவிக்கு) அழைப்பவை (தங்களுக்காகத்) தங்கள் இறைவனிடம் பரிந்து பேசுவதற்கு (இறைவனிடம்) மிக நெருக்கமானவர் யார்?" என்று தேடிக் கொண்டு, அவன் அருளையே எதிர்பார்த்து அவனுடைய தண்டனைக்கும் அஞ்சுகின்றன. ஏனென்றால், நிச்சயமாக (நபியே!) உமது இறைவனின் தண்டனை மிகவும் அஞ்சத்தக்கதாகும்." (குர்ஆன் 17 : 56, 57)

இவ்வாறு, அல்லாஹ்வைத் தவிர – மனிதர்களால் உதவிகளை எதிர்பார்த்து வணங்கப்படுபவற்றில் எதுவுமே, எந்த மனிதனுக்கும் எவ்வித உதவியும் செய்யவியலாதென்பதையும், பிறருக்கு மட்டுமென்ன தனக்குத் தானே கூட எவ்வித சுய உதவியும் செய்ய இயலாதென்பதையும் எடுத்துக் காட்டும் திருவசனங்கள் மாமறையில் நிறைந்து காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய திருவசனங்களின் ஒன்றுதான், இந்த அத்தியாயத்தில், தொடக்கத்தில் கண்டவாறு துவங்குகின்றது.

அல்லாஹ் அல்லாதவற்றை ஆண்டவனாக வழிபடும் பெரும்பான்மையோர் இம்மையில் இன்பங்கள் துய்த்தும், இன்னல்கள் துடைத்தும் இனிது வாழ்கின்றனரென்றால், அதற்குக் காரணம், அவர்களால் வழிபாடு செய்யப்படும் கற்பனைக் கடவுளர்களல்ல! மண்ணைப் படைத்து, அதில் மானிட இனத்தைத் தோற்றுவித்துப் பல்கிப் பெருகச் செய்யும் அல்லாஹ், தன்னை அளவற்ற அருளாளனாக அறிவித்தமையால்தான் தன்னை வணங்காமல், தன் படைப்புகளை வணங்கும் மனிதர்களுக்கும் தாராளமாக வழங்கி வருகிறான். இம்மையில் காணப்படும் இந்நிலை இறைவனின் "அர்ரஹ்மான்" தன்மையின் வெளிப்பாடாகும். ஆனால் மறுமையில் அவன் "அர்ரஹீம்" தன்மையைக் காட்டித் தன்னை வணங்கியோர்க்கு மட்டும் வளவாழ்வு வழங்கித் தன்னை வணங்க மறுத்தோர்களை வெந்தழல் நரகால் வேதனைப்படுத்துவான்.

அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படும் அனைத்தும், இம்மையில் தம்மை வணங்கியோர்க்கு உதவிடாது மட்டுமல்ல, தம்மை வணங்கியோர்க்காக அல்லாஹ்விடம் மறுமையில் பரிந்து பேசவும் முன்வரா. மாறாக, தம்மை வணங்கியோருக்கு எதிர்ப்புப் படையாகவே அனைத்து வழிபாட்டுச் சிலைகளும் வாக்கு மூலம் கொடுக்கும். இதையே இறைவன் (அவைகள், அவர்களுக்கு எதிராகக் கொண்டு வந்து நிறுத்தப்படும் படைகளாவர்) எனும் தொடர் மூலம் உணர்த்துகிறான். **(குர்ஆன் 18:52)**

ஈஸா நபியை இறைவனாக்கிய இனத்தாருக்கெதிராக, ஈஸா நபி கொடுக்கும் வாக்கு மூலம் வான்மறையில் கீழ்க்கண்டவாறு வந்துள்ளது. (நபியே!) ஈஸாவை நோக்கி, மர்யமின் மைந்தர் ஈஸாவே! நீவீர் மக்களை நோக்கி, "அல்லாஹ்வைத் தவிர என்னையும் என் தாயையும் இரு இறைவன்களாக எடுத்துக் கொள்ளுங்கள்!" என்று குறிப்பிட்டீர்களா? என்று (மறுமையில்) அல்லாஹ், வினவுவதை நினைத்துப் பாருங்கள். அதற்கவர், "(இறைவா!) நீ மிகவும் தூயவன். எனக்கு அறவே தகுதியற்றதை நான் ஒருக்காலும் கூறவில்லை. அவ்வாறு நான் கூறியிருந்தால் நிச்சயமாக நீ அதை நன்கு அறிந்தேயிருப்பாய்! என்னுள்ளத்தில் உள்ளதை நீ நன்கு அறிவாய்! உன்னிலுள்ளதை நான் அறியமாட்டேன். நிச்சயமாக நீயே, மறைவான அனைத்தையும் நன்கு அறிபவன். (மேலும்) நீ எனக்கு ஏவியபடி நான் அவர்களை நோக்கி, எனக்கும் உங்களுக்கும் இறைவனாகிய அல்லாஹ்வையே வணங்குங்கள்!" என்று கூறினேனேயல்லாமல் வேறெதையும் நான் (ஒரு போதும்) கூறவேயில்லை" என்று பதிலளிப்பார்கள் **(குர்ஆன் 5:116)**

எனவே, எல்லாம் வல்ல அல்லாஹ்வை மட்டும் வணங்கினாலே மறுமையில் ஈடேற்றம் எய்தவியலும் எனும் அழுத்தமான உண்மை இந்த அத்தியாயத்தில் மேற்கண்ட வசனங்களில் வலியுறுத்தப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் மொழித் தெளிவுரை

## பணத்தின் குணம்

(இமாம் கஸ்ஸாலி ரஹ்மதுல்லாஹ் அலைஹி)

"மனிதனுக்கு மூன்று ஆணைகள்.

ஒன்று மரணம் வரை துணை நிற்கும் - இது பணம் மற்றது மரணம் வரை துணை நிற்கும் - இது மனைவி மூன்றாவது இறுதிவரை துணை நிற்கும் - இது நற்செயல்." நூல் - மிஷ்காத்

பணத்திலிருந்து மனித சமுதாயத்திற்குக் கிடைக்கும் நன்மைகள் பல இருந்தாலும், அதிலிருந்து தவிர்க்க முடியாத ஒரு விபரீதம் முளைக்கிறது. அந்த விபரீதத்தை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்போது பணத்தினால் கிடைக்கும் நன்மையைவிட, பணத்தினால் உருவாகும் தீமை வலிமை மிக்கது என்றே தீர்மானிக்க வேண்டியிருக்கிறது.

பொருளாதாரம் குறித்து இறைவனின் கருத்துக்களை அடியில் ஆராய்வோம்.

"நம்பிக்கையாளர்களே! உங்கள் செல்வமும் உங்கள் பிள்ளைகளும் இறைத் தியானத்திலிருந்து உங்களைத் திருப்பிவிடக் கூடாது. அப்படிச் செய்கிறவர்கள் இறுதியில் வருந்த வேண்டி ஏற்படும்!" எனும் கருத்தைத் திருமறை நம் நெஞ்சில் தெளிக்கிறது.

இறைத் தியானம் என்பது என்றைக்கும் மறக்க முடியாத ஒன்று. நோட்டுக் கற்றைகளை எண்ணிப்பார்த்து மகிழ்கிறவர்கள் - குழந்தைச் செல்வங்களைக் கொஞ்சி விளையாடி பொழுது போக்குகிறவர்கள் என்றைக்குத்தான் இறைவனை நினைத்துப் பார்க்கப் போகிறார்கள்? பணத்தை எண்ணிப் பார்ப்பது தவறல்ல. குழந்தையைக் கொஞ்சி விளையாடுவதும் குற்றமல்ல. என்றாலும் இந்த இன்ப நுகர்ச்சியில் இறைவனை மறந்து விடக் கூடாது. என்பதே இந்த இறைவசனத்தின் கருத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இறைவசனம் செல்வத்தால் விளையும் முதல் விபரீதத்தைத் தெளிவுபடுத்துகிறது. இந்த உண்மையை மற்றொரு வசனம் இப்படிச் சுட்டிக் காட்டுகிறது; "உங்கள் செல்வமும் உங்கள் குழந்தைகளும் உங்களுக்குச் சோதனைகளே. இறைவன் உங்களுக்கு அளிக்கவிருக்கும் நற்கூலி மகத்தானது."

பிறிதோரிடத்தில் வேறொரு வசனம் இப்படி எச்சரிக்கை செய்கிறது; "பொருளைச் சேர்த்துச் சேர்த்துத் தான் நீங்கள் வீணானீர்கள்!"

உங்களையே நீங்கள் உற்றுப் பாருங்கள்! உங்களைச் சுற்றி நடக்கும் அட்டூழியங்களை எண்ணிப் பாருங்கள்! பொறுப்பாளிகளிடம் தோன்றும் ஊழல்களைக் கவனித்துப் பாருங்கள்! அவை அத்தனையும் பணத்தால் தான் உண்டாகின்றன. ஒரு மனிதனின் உள்ளத்தில் பொருளாசை தோன்றும்போது அவன் செய்யும் செயல்களில் நம்மால் நேர்மையைக் கண்டுபிடிக்க முடியாது. இதனால்தான் பெருமானார் (ஸல் அவர்கள்) பொருளாசையையும் பதவி மோகத்தையும் இரண்டு ஓநாய்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள.

"ஓர் ஆட்டு மந்தையில் இரண்டு ஓநாய்கள் புகுந்தால் என்ன விபரீதம் ஏற்படும்? அதைவிடப் பெரிய விபரீதம் ஒரு மனிதனின் மனத்தில் பொருளாசையும் பதவி மோகமும் நுழையும்போது ஏற்படும்" என்று அவர்கள் குறிப்பிட்டிருப்பது உங்கள் சிந்தனைக்குரியதாகும்.

"தண்ணீரிலிருந்து புற்பூண்டுகள் முளை விடுவது போல் பொருளாசையிலிருந்து துரோக மனப்பான்மை முளைவிடுகிறது!" என்று பெருமானார் (ஸல் அவர்கள்) மற்றோரிடத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். "என்னைப் பின்பற்றும் பெருங் குடி மக்களில் ஒரு சாரார் தோன்றுவார்கள்; ருசிமிக்க உணவு வகைகளை அவர்கள் சாப்பிடுவார்கள்; உயர்ந்த ரக குதிரைகளைப் பிரயாணத்திற்கு வைத்துக்கொள்வார்கள்; அழகிய பெண்களை மணப்பார்கள்; விலையுயர்ந்த ஆடைகளை அணிவார்கள். அவர்களின் வயிறுகள் கிடைத்த உணவில் திருப்தியடைய மாட்டா; அவர்களின் உள்ளங்கள் குவிந்த செல்வத்தைப் பார்த்துப் 'போதும்!' என்று கூறமாட்டா! உலக இன்பங்களைத் தேடித் திரியும் அவர்கள் உலகத்திற்காகவே உயிர் வாழ்வார்கள். அவர்களைப் பொறுத்த மட்டில் உலகத்திற்கு அப்பால் ஒன்றுமே கிடையாது. இறைவனை மறந்து நிற்கும் அவர்கள் உலகத்தையே தமது நாயகனாக்கிக் கொள்வார்கள்.

உலகில் வாழ வந்திருக்கும் மனிதன் உலகத்திற்கு அப்பாலுள்ள வாழ்வை என்றும் மறந்துவிடக் கூடாது. உலகில் மனிதனை வாழ வைத்திருக்கும் இறைவனின் தீர்ப்பு அது. உலக வாழ்வையே லட்சியமாகக் கொண்டு செயல்படுவது மனிதனின் சிறப்பிற்கு இழுக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பிப்பதாகும். மேலேயுள்ள நபிக் கருத்தில் இந்த உண்மை விளக்கப்படுகிறது.

இதோ மீண்டும் பெருமானார் (ஸல்) அவர்கள் பேசுகிறார்கள் "உலக வாழ்க்கைக்கென்றே சிலர் இருக்கிறார்கள்; அவர்களிடம் அதை விட்டு விடுங்கள்! உலகிலிருந்து ஒரு மனிதன் தன்னுடைய தேவைக்குமேல் அதிகமாக எடுத்துக்கொண்டால், அவன் அதற்கு இறைவனிடம் தண்டனை அனுபவித்தே ஆக வேண்டும்."

"மனிதன் அலறுகிறான்; 'என் பொருள்! என் பொருள்!' என்று அவன் சத்தம் போடுகிறான். அவன் பொருளாம்! அப்படி ஒன்று எங்குமில்லை. அவன் தின்று தீர்த்தது, அணிந்து வீணாக்கியது முதலியவற்றைத் தவிர்த்து அவனுக்கென்று தனிப்பட்ட முறையில் எந்தப் பொருளுமில்லையே!" இதுவும் பெருமானார் (ஸல் அவர்கள்) கருத்துத்தான்.

"நாயகம் அவர்களே! மரணத்தை என் மனம் வெறுக்கிறதே. காரணம் என்ன?" என்று நபித்தோழர் ஒருவர் கேட்டார்.

பெருமானார் (ஸல்) அவர்கள் பளிச்சென்று திருப்பிக் கேட்டார்கள். "உம்மிடம் பணம் இருக்கிறதா?"

நபித் தோழர் ஆமோதித்தார்.

இது பெருமானார் (ஸல்) அவர்கள் விடை; "அப்படியானால் உம் பணத்தை முதலில் இறைவழிக்குச் செலவு செய்யும்! அப்புறம் அதைத் தொடர்ந்து அதே வழியில் மகிழ்ச்சியோடு நீரும் பிரவேசிக்கலாம். மனிதனின் உள்ளம் பணத்துடன் பிணைந்து நிற்கிறது. அதை இங்கே வைத்து விட்டு அங்கே செல்வதற்கு அவன் மனம் இடம் தராது!"

"மனிதனுக்கு மூன்று துணைகள்" என்று மற்றொரு சமயம் கூறினார்கள். "ஒன்று, மரணம் வரை துணை நிற்கும் - இது பணம். மற்றொன்று மண்ணறை வரை துணை நிற்கும் - இது மனைவி. மூன்றாவது, இறுதி வரை துணை நிற்கும் - இது நற்செயல்."

பெருமானார் (ஸல்) அவர்கள் மட்டுமன்றி ஈஸா நபியவர்களும் பணத்தைத் தாழ்த்தியே மதித்திருக்கிறார்கள்.

"நீங்கள் நீர்மீது நடந்து செல்கிறீர்கள். எங்களால் அப்படி நடக்க முடியவில்லையே. காரணம் என்ன?" என்று ஒரு வினாவை நண்பர்கள் எழுப்பினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈஸா நபி அவர்கள் புன்னகை பூத்தார்கள். "வெள்ளியையும் தங்கத்தையும் நீங்கள் எப்படி மதிக்கிறீர்கள்?"

"அவை நல்ல பொருள்கள்; உயர்த்தி மதிக்கிறோம்!"

மீண்டும் ஒரு புன்னகை பிறந்தது. "நான் அப்படி மதிக்கவில்லை. என்னைப் பொறுத்த வரையில் வெள்ளி – தங்கத்திற்கு மண்ணாங்கட்டிக்கும் வேற்றுமை கிடையாது. நான் நீர்மீது நடந்து செல்வதற்கு இது தான் காரணம்!"

நபித் தோழர் அபூதர்தாவிற்கு சல்மான் பார்ஸீ எழுதிய கடிதத்திலிருந்து ஒரு பகுதி அடியில் இடம் பெறுகிறது.

"உலகிலிருந்து நீங்கள் அடையும் இன்பங்கள் ஒவ்வொன்றிற்கும் நன்றி செலுத்தியே ஆக வேண்டும். எச்சரிக்க விரும்புகிறேன். உங்களால் நன்றி செலுத்த முடியாத எந்த இன்பத்தையும் உலகிலிருந்து எடுக்காதீர்கள்!"

துறவறம், வறுமை குறித்து இரண்டு நூல்கள் எழுதியிருக்கிறேன். அவற்றில் ஆங்காங்கே பொருளாதாரம் பற்றியும் எழுதியிருக்கிறேன். உலக இன்பத்தை வெறுக்கும்போது துறவறம் தோன்றுகிறது. செல்வம் பறிக்கப்படும்போது வறுமை வலிய வருகிறது. எனவே அந்த நூல்களில் உலக இன்பத்தையும் பணத்தையும் பின்னி வைத்துச் சில விவரங்களை எழுதியிருக்கிறேன். அவை உங்களுக்குப் பயன்படலாம். என்றாலும் எழுதியதையே திரும்ப எழுத விரும்பாததால் இத்துடன் நிறுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

பணம் என்பது யாருக்கும் தவிர்க்க முடியாத தேவை தான். ஒரு மனிதன் இறந்ததும் மக்கள் என்ன கேட்கிறார்கள் தெரியுமா? இதோ பெருமானார் (ஸல்) அவர்கள் விளக்குகிறார்கள்.

"ஒரு மனிதன் இறந்ததும் வானவர்கள், "அவன் எவ்வளவு தர்மம் செய்திருக்கிறான்?" என்று கேட்கிறார்கள். மக்களோ, "அவன் எவ்வளவு பணம் சேர்த்து வைத்திருக்கிறான்?" என்று கேட்கிறார்கள்."

பணம் என்பது சக்திமிக்க ஒரு பொருள்தான். என்றாலும் செலவு செய்வதற்காகவே மனிதன் சம்பாதிக்கிறான். யாருக்கும் பயன்படாமல் பெட்டியில் முடங்கிக் கிடக்கும் பணம் சிறப்பை இழந்து விடுகிறது. மனிதன் தான் சம்பாதித்த பணத்தை வைத்துத் தர்மம் செய்ய வேண்டும். அந்தத் தர்மம் அவனுக்கு வானவர்களிடம் மதிப்பைக் கொடுக்கும். ஆனால் அவனுடைய உற்றார் உறவினருக்கு அதைப் பற்றிக் கவலை கிடையாது. அவன் சிரமப்பட்டுச் சேர்த்து வைத்திருப்பதைப் பங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடுவதுதான் அவர்களின் குறிக்கோள். எனவே, "அவன் எவ்வளவு பணம் சேர்த்து வைத்திருக்கிறான்?" என்று கேட்கிறார்கள். அதாவது பங்கு போட்டால் தமக்கு எவ்வளவு கிடைக்கும் என்று கணக்குப் போடுகிறார்கள் - இந்தக் கருத்துத்தான் மேலே சுட்டிக் காட்டப்படுகிறது.

அறிஞர்கள் பணத்தைப் பற்றிக் கொண்டிருந்த கருத்து விசித்திரமானது. நபித் தோழர் அபூதர்தா, செல்வத்தை மனிதன் அனுபவிக்கும் மிகப் பெரும் துன்பம் என்றே கருதியிருக்க வேண்டும்.

ஒரு சமயம் அபூர்தர்தாவுக்கு யாரோ ஒருவர் சிறிது தீங்கிழைத்து விட்டார். அபூர்தர்தாவின் மனம் வேதனைப்பட்டது. இரு கரங்களையும் மேலே உயர்த்தி இறைவனிடம் முறையிட்டார்; அந்தப் பாதகனுக்குக் கொடிய துன்பம் கொடுக்குமாறு பிரார்த்தித்தார். எப்படிப் பிரார்த்தித்தார் என்று கேட்கிறீர்களா? அடுத்து வருகிறது அவர் செய்த பிரார்த்தனை;

"இறைவனே! எல்லாம் தெரிந்த நாயகனே! எனக்கு ஒருவன் தீங்கு செய்துவிட்டான். அந்தக் குற்றத்திற்கு நீதான் தண்டனை கொடுக்க வேண்டும். எனவே அவனுக்கு முழுமையான ஆரோக்கியத்தைக் கொடு; அவன் வாணாளை அதிகப்படுத்து; அவன் செல்வத்தை விரிவு படுத்து."

நல்ல ஆரோக்கியமும் நிறைந்த செல்வமும் சேரும் போது ஒரு மனிதன் தன்னையறியாமல் பெருந்துன்பத்தில் சிக்கிக்கொள்கிறான் என்னும் உண்மை அபூர்தர்தாவின் பிரார்த்தனையிலிருந்து நமக்குத் தெரிகிறது.

தெளிந்த ஞானமும் சுத்தமான கண்ணோட்டமும் பெற்றிருந்த அறிஞர் அலீ (ரலி) அவர்கள் பணத்தைப் பற்றிக் கொண்டிருந்த கருத்து அடிவில் மின்னுகிறது. ஒரு நாள் அவர்கள் வெள்ளி நாணயம் ஒன்றைக் கையில் வைத்திருந்தார்கள். உள்ளங்கையில் படுத்துக் கிடந்த அந்த வெள்ளி நாணயத்தைப் பார்த்து அறிஞர் அவர்கள் இளக்காரமாகச் சிரித்தார்கள். அந்தச் சிரிப்பைத் தொடர்ந்து வெளிவந்த வார்த்தைகளில்தான் எத்தனை சக்தி! "நீ பயனுள்ள ஒரு பொருள்தான். ஆனால் என் கையைவிட்டு வெளியே போகும்வரை உன்னால் எனக்கு எந்த நன்மையும் செய்ய முடியாது!"

பணம் என்பது செலவு செய்வதற்காகப் படைக்கப்பட்ட ஒன்று எனும் உண்மை இங்கு மீண்டும் சுட்டிக் காட்டப்படுகிறது.

யஹ்யா பின் மஆத் என்ற அறிஞரின் வார்த்தைகளில் ஆழமான எச்சரிக்கை நமக்குத் தெரிகிறது. "பணம் என்பது ஒரு தேள். முறைப்படி பயன்படுத்தத் தெரியாவிட்டால் அதைத் தொடாதே! இல்லையேல் அது உன்னைக் கொட்டிக் கொலை செய்துவிடும்." – பணத்தினால் பாழானவர்களுக்கு உதாரணம் வேறு காட்ட வேண்டுமா என்ன? கைப்புண்ணுக்கு யாரேனும் கண்ணாடி பார்ப்பார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முஸ்லிம் பெருங்குடி மக்களின் தலைவரே!" என்று வேதனையும் பாராட்டும் கலந்த குரலில் கூப்பிட்டார் முஸ்லிமா இப்னு அப்துல் மலிக். "நீங்கள் சாதித்தவை மகத்தானவை. உங்களுக்குமுன் வேறு யாரும் அவ்வளவு பெரிய சாதனைகளைச் சாதித்தது கிடையாது. இந்தத் துறையில் நீங்களே தனித்து நிற்கிறீர்கள். ஆனால் உங்கள் மனைவி மக்களுக்கென்று எதையும் நீங்கள் சேர்த்து வைக்கவில்லை."

மரணப் படுக்கையில் கிடந்த உமர் பின் அப்துல் அஸீஸ் மங்கிய குரலில் பேசினார். "என்னைப் பிடித்து உட்கார வையுங்கள்!"

அவரது குமாரர்கள் பதின்மூன்று பேரும் சூழ்ந்து நின்றார்கள். உமா கைத்தாங்கல் கொடுத்து உட்கார்த்தி வைக்கப்பட்டார். காய்ந்து போன அவரது உதடுகளுக்கு மத்தியிலிருந்து ஒவ்வொன்றாக வெளிவந்த வார்த்தைகள் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டியவை.

"நீர் என்ன சொன்னீர்? என் மக்களுக்கென்று எதையும் சேர்த்து வைக்கவில்லை என்றுதானே சொன்னீர்?"

மங்கிப் போயிருந்த கண்களில் இலேசான ஒளிபடர்ந்தது. உதடுகளில் புன்னகை நெளிந்தது.

"ஆம், நீர் அப்படித்தான் சொன்னீர். முஸ்லிமா! நீர் சொன்னது சரிதான், நான் மறுக்கவில்லை. ஆனால் அதை வைத்து என்னைக் குற்றவாளியாக்கிவிட முடியாது. அவர்களுக்கு வேண்டிய உரிமை முழுவதையும் நான் கொடுத்துவிட்டேன். அதில் நான் குறை வைக்கவில்லை. ஆனால் மற்றவர்களின் உழைப்பிலிருந்து கிடைக்கும் ஊதியத்தில் அவர்களுக்கு என்னால் எப்படிப் பங்கு ஏற்படுத்த முடியும்? அவர்கள் உழைக்கட்டும்; அதற்குரிய ஊதியத்தைப் பெறட்டும். நான் வேண்டாம் என்றா சொல்கிறேன்? இல்லையே! அவர்கள் இறைவனுக்கு வழிப்பட்டு நடந்தால், இறைவனே அவர்களுக்கு போதுமானவன். இறைவனுக்கு மாறு செய்வதால் ஏற்படும் துன்பங்களை அவர்கள்தான் அனுபவிக்க வேண்டும். அவர்களுக்காக நான் கவலைப்பட முடியாது!"

முஹம்மது இப்னு கஅபைப் பார்த்து ஒரு நண்பர் கேட்டார். "உங்களுக்கு இறைவன் திரண்ட செல்வத்தைக் கொடுத்திருக்கிறான். அதை உங்கள் பிள்ளை குட்டிகளுக்காக ஒதுக்கி வையுங்கள்; இதில் தவறு என்ன?" என்று.

முஹம்மது இப்னு கஅப் உடனே பதிலிறுத்தார்; "எந்தத் தவறும் கிடையாது. ஆனால் அது நடக்காத காரியம். என் செல்வத்தை எனக்காகவே ஒதுக்கி வைக்க விரும்புகிறேன். இப்போது நான் தர்மம் செய்யும் செல்வம் மறுமையில் எனக்குப் பெருத்த செல்வத்தைக் கொடுக்கும்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமையான மஸ்ஜித்

தமிழாக்கம் : ஹாபிஸ் முஹம்மத் அப்துல்லாஹ் (ஜாமிஆ)

பார்க்கிலா பாஸூ என்ற நாட்டின் தலைநகரமான பூபூஜோலாசு என்ற நகரத்தில் அழகான நூதனமான பழமைவாய்ந்த பள்ளி ஒன்று இருக்கின்றது. அது பூபூஜோலாசு என்ற நகரத்திலேயே மிகவும் பழைமை வாய்ந்த பள்ளிவாயலாகும். இந் நகரம் பார்க்கிலா பாஸூ குடியரசு மக்களுக்குரிய வியாபார தலை நகரமாகவும் விளங்குகிறது. இந்த பள்ளி கட்டப்பட்டது கி.பி 19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் இந்தப் பள்ளிவாயல் பழமை வாய்ந்த அந்தப் பிரதேசத்திற்கு நடுவிலும் கட்டிடங்களுக்கு மிகவும் அண்மித்ததாகவும் காணப்படுகிறது. அது சதுரவடிவமானது.

இந்த நகரம் மிகவும் பழங்குடி மக்கள் வாழக்கூடியதாக இருக்கின்றது. கோத்திரத்தின் அடிப்படை மக்கள் அங்கு கடைகளுடன் வசிக்கின்றார்கள். சிலருடைய கருத்தின்படி கிட்டத்தட்ட கி.பி 1880ல் இந்தப்பள்ளி அமையப் பெற்றது. கொடுங்கோளர்களான பிரான்ஸ் நஸாராக்களுடைய ஆதிக்கத்திற்கு எதிராக அந்தப் பள்ளியில் மக்கள் ஒன்று சேர்ந்தார்கள். வேறு ஒருவர் கூறுகிறார் கி.பி 1874 ஆம் ஆண்டு இந்த கிராமத்திற்கு அண்மையில் நடைப்பெற்ற பாமா என்ற யுத்த முடிவின்போது அமைக்கப்பட்டது.

ஸித்தீக்ஸானு என்ற இமாமுடைய முயற்சியின் மூலம் மிக பழமை வாய்ந்த இந்தப் பள்ளி கட்டப்பட்டது. இதை 10 வருடகாலங்களாக கட்டினார்கள். தூய்மையான மண்ணினாலும் களிமண்ணினாலும் கலக்கப்பட்டு செய்யப்பட்ட நல்ல செங்கற்களின் மேலும் பல கனிப்பொருட்களின் மூலம் அமைக்கப்பட்டது. பள்ளியின் உட்பகுதிகளில் 42 தூண்களால் கூரை போடப்பட்டுள்ளது. இன்னும் ஒன்பது ஸப்புகள் வயது முதிர்ந்த கண்ணியமானவர்கள் தொழுவதற்காக வேண்டி இருக்கிறது. பகல் வேளைகளில் கூட ஸப்புகள் இருளாகத்தான் இருக்கும் எனவே ஒருவர் மற்றவரைப் பார்த்து விளங்க மாட்டார்கள் என்றாலும் ஒரு ஒளியின் மூலம் அல்லது அது போன்ற ஒரு உதவியின் மூலம்தான் அவர்களை அறிய முடியும்.

ஒவ்வொரு 10/15 வருடமும் கூரை புதுப்பிக்கப்படும். மேலும் பள்ளியின் தேவைகளை நிறைவேற்றி பாதுகாப்பதற்காக ஒரு சமூகம் இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக அந்தப் பள்ளிக்கு தொடர்ந்து தண்ணீர் இடைவிடாது கிடைப்பதற்குரிய குழாய்களை அமைப்பதற்கும் ஒரு சமூகம் இருக்கின்றது.

பள்ளிக்குள்ளால் அதிகமான கப்ராலிகள் அடங்கப்பட்டு இருப்பதாக பல கருத்துக்கள் இருக்கின்றன. இன்னும் சொல்லப்படுகின்றது அதற்குள்ளால் தியாகிகளான ஷேக்மார்களுடைய கப்ருகள் இருக்கின்றது. அதனுடைய பரகத் பெருவதற்காக வேண்டி பள்ளிக்குள்ளால் அவர்கள் அடக்கப்பட்டுள்ளார்கள் இன்னும் ஸித்தீக் சானூனுடைய கப்ரும் ஊர்வாசிகளின் சிலருடைய கப்ரும் இன்னும் பள்ளியுடைய இமாம்களின் கப்ருகளும் பள்ளியின் உள்ளே அல்லது பள்ளியின் பக்கத்தில் இருக்கின்றது. அந்த இடங்களை வயதில் மூத்தவர்கள்தான் அறிவார்கள் 200 – 300 கப்ருகள் அங்கே இருக்கின்றது. மேலும் இங்கு இருக்கின்ற மக்தப்பில் அறியப்பட்ட இந்த பழங்கால வரலாறுகள் சரியானதுதான். இவைகள் அனைத்தும் இந்த நகர் மக்கள் இங்கு பிறந்தவர்கள் கூறியது, இந்த கப்ருகள் பள்ளிக்குள் அல்லது ஓரத்தில் இருக்கின்றது என்பதை உறுதி செய்கின்றார்கள்.

பள்ளியை இரண்டு பகுதிகளாகப் புனர்நிர்மானம் செய்யப்பட்ட பின்பு இளம் யுவதிகளுக்கு அன்றி வயோதிப பெண்களுக்கு மாத்திரம் அந்த மஸ்ஜிதுக்கு நுழைய அனுமதி வழங்கப்பட்டது. ஜன்னல், கதவு திறந்திருப்பதின் காரணமாக அந்தப் பள்ளிக்கு இயற்கை ஒளி கிடைக்கிறது. இன்னும் கூரையில் ஓட்டைகள் இடப்பட்டுள்ளது. மழை பொழியும் நேரத்தில் அழகான கிண்ணங்களைக் கொண்டு மூடுவார்கள். இன்னும் அவ்விடத்தின் ஏரியாவின் அருங்காட்சியகமாகவும் அது விளங்குகின்றது. மேலும் சிந்தனைக்கு புதுமையானதாகவும் இருக்கிறது.

இன்னும் அந்தப் பள்ளிக்கு இரு மினாராக்கள் இருக்கின்றன. ஒன்று பிரதான மினாரா மற்றது இரண்டாம்தர மினாரா முதலாவது மினாராவிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து தட்டுகளும் ஐந்து அறைகளும் உயர்ந்த படுக்கை அறைகளும் இருக்கின்றன. அதில் இமாம் தொழுகையை நிறைவேற்றுவார். இரண்டாவது மினாராவிலே நான்கு தட்டுகளும் நான்கு அறைகளும் இருக்கின்றன. சிலருடைய கருத்தின்படி இந்த மினாராவில் குறிப்பாக இஃதிகாபுக்கு வரக்கூடிய சேகுமார்களுக்கும் இமாம்களுக்கும் அல்லாஹ்வை இபாதத் செய்வதற்காக வேண்டியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ரமழான் காலத்திற்கும் ரமழான் அல்லாத காலத்திற்காகவும் இபாதத்துக்காக அம்மினாரா அமைக்கப்பட்டுள்ளது.

அந்த மினாராவை மேகங்கள் மூடுவதை விட்டும் பாதுகாப்பதற்காக வேண்டி தீக்கோழி முட்டை வடிவிலான ஒரு கட்டுமாணம் மினாராவின் உச்சியிலே கட்டப்பட்டுள்ளது. இன்னும் சிலர் கூறுகிறார்கள் வெறுமனே அலங்காரத்திற்கு மாத்திரம்தான் அந்த முட்டை வடிவிலான கட்டுமாணத்தை வைத்திருக்கிறார்கள் என்று அதை உறுதியாகக் கூறக்கூடியவர்கள் கூறுகிறார்கள்.

மஸ்ஜிதின் மேல் தட்டிலிருந்து கூரைக்கு ஏறி செல்வதற்கு படியும் வைத்திருக்கின்றார்கள். மஸ்ஜிதை தரிசிப்பதற்காக வேண்டி வேறு இனத்தவர்களும் ஆபிரிக்கர்களும் வந்து செல்வார்கள். இம் மஸ்ஜிதில் உலகம் சார்ந்த பழங்கால கதைகளை அறிந்தவர்கள் அதை பாதுகாப்பதற்காக அதனை கற்றுக்கொடுக்கிறார்கள். இந்தப் பிரதேசத்தை இணைத்துப் பார்க்கும் பொழுது ஒரு புறத்தில் இன்று வரைக்கும் அதிகமான பழங்கால வரைப்படங்களும் அதற்குள்ளால் இருக்கின்றன. அந்தப் பிரதேசத்தின் காலநிலையை அறியக்கூடிய பக்குவம் அந்த ஊர் மக்களுக்கு இருக்கிறது.

குறிப்பு : - இம்முறை நிதாவின் அட்டைப்படத்தை அலங்கரிப்பது இந்த மஸ்ஜித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவையர் அரங்கம்

# வெற்றிமிக்க மனைவி

ஒரு முஸ்லிம் பெண்மணி, மனைவியர்களிலேயே சிறந்த மனைவியாக – வெற்றிகரமான மனைவியாக இருப்பாள். தன் உயர்ந்த நற்குணங்களாலும், நேரியச் சிந்தனைகளாலும் மனரீதியாகவும் சமுதாய ரீதியாகவும் மேன்மை மிக்கவளாகத் திகழ்வாள்.

மனைவியரிலேயே மிக அதிகமாகக் கணவருக்கு நன்மை செய்யக் கூடியவளாகவும், அருள் வளங்கள் மிக்கவளாகவும் திகழ்வாள். காரணம், அவள் தனது மார்க்கம் தனக்கு விதித்துள்ள எல்லைகளை, சட்டத்திட்டங்களை நன்கு தெரிந்தவளாக இருப்பாள். கணவருக்குக் கீழ்ப்படிவதின் வழிமுறைகளை அந்த மார்க்கத்தின் வாயிலாகக் கற்று அறிந்திருப்பாள். இதனால் மட்டுமே, ஓர் ஆணுக்குக் கிடைக்கக் கூடிய இன்பங்களிலேயே மிகச்சிறந்த இன்பமாக அந்தப் பெண் திகழ்வாள்.

கணவர் வீட்டிற்குள் நுழையும்போது அவரை மலர்ந்த முகத்துடன் வரவேற்பாள். அழகிய முறையில் அவருக்கு முகமன் (ஸலாம்) கூறுவாள்.

எப்படி வசந்த காலம் வருகிறதோ, அதுபோல் கணவருக்கு ஒரு வசந்த காலமாகத் திகழ்வாள். கணவரின் மனதை நல்ல வார்த்தைகளைக் கொண்டும், ஆறுதலான பேச்சுகளைக் கொண்டும் செழிப்புறச் செய்வாள்.

இனிய நகைச்சுவைகளைச் கொண்டும், கண்ணைக் கவரும் அலங்காரங்களைக் கொண்டும், தன் பக்கம் அவரை ஈர்க்கக் கூடிய தோற்றத்தைக் கொண்டும், தூய்மையான ஒழுங்கமைப்பு மிக்க வீட்டைக் கொண்டும், மகிழ்ச்சி ஊட்டக்கூடிய உரையாடல்களைக் கொண்டும், ருசிமிக்க உணவு வகைகளைக் கொண்டும் அழகிய விரிப்பைக் கொண்டும் தம் கணவரின் வாழ்க்கையை செழிப்பாக்குவாள்.

வாழ்வின் அதிகமான நேரங்களைத் தம் கணவரின் மகிழ்ச்சிக்காகவே பயன்படுத்துவாள்; அதற்காகவே பெரும் பகுதிகளைச் செலவழிப்பாள்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவரின் அன்பைத் தேடுவாள்; அதில் பேராவல் கொள்வாள்; அவரது இரகசியங்களைப் பரப்பமாட்டாள்; கணவருடைய எந்தக்காரியத்தையும் வீணாக்கிவிட மாட்டாள்; கஷ்ட காலங்களில் கணவருக்கு உறுதுணையாக இருப்பாள்; நல்ல ஆலோசனைகளை வழங்குவாள்; அப்பழுக்கற்ற – எந்த உள்நோக்கமும் இல்லாத ஆலோசனைகளைக் கூறுவாள்.

கணவரின் மகிழ்ச்சியே தனது மகிழ்ச்சியாகக் கொள்வாள். கணவரின் கவலையை தனது கவலையாக எடுத்துக்கொள்வாள். அகத்தாலும் புறத்தாலும் கணவரின் மனதை மகிழ்ச்சியால் நிரப்புவாள். நற்பாக்கியம், சந்தோஷம், மலர்ச்சியைக் கொண்டு கணவரின் வாழ்வை செழுமையாக்குவாள். அனைத்து விதமான வணக்க வழிபாடுகளை நிறைவேற்றுவதற்கு கணவரை ஆர்வமூட்டுவாள். தானும் அவற்றில் பங்கெடுத்துக் கொண்டு அவரை உற்சாகமூட்டுவாள்.

கணவரின் பெற்றோருடன் உபகாரமாக நடந்து கொள்வாள். அவர்களுக்கு நன்மை செய்வாள்; கணவரின் குடும்பத்தார் மற்றும் உறவினர்களுக்கு கண்ணியம் தருவாள்; அன்னிய ஆண்களை விட்டும் தன் பார்வையை தாழ்த்திக்கொள்வாள். முட்டாள்தனமான வீணான கெட்ட பேச்சுகளை விட்டும் தன்னை தூரமாக்கிக் கொள்வாள். தமது கணவருக்கும் பிள்ளைகளுக்கும் அமைதி, நிம்மதி, மன ஓர்மை, குழப்பமற்ற சூழ்நிலை அமைய வேண்டுமென பேராசை கொள்வாள்.

இத்துடன் உறுதிமிக்கவளாக இருப்பாள். ஆனால் கடினமானவளாகவோ முரட்டு சுபாவமுள்ளவளாகவோ இருக்கமாட்டாள். மென்மை மிக்க உணர்வுள்ளவளாக இருப்பாள். எனினும் பலவீனமானவளாகவோ அப்பாவியாகவோ இருக்கமாட்டாள். தன்னிடம் பேசுபவர் தன்னைக் கண்ணியப்படுத்தும்படி நடந்து கொள்வாள். பெருந்தன்மையும் மன்னிக்கும் மனப்பான்மையும் கொண்டவளாக விளங்குவாள். தீமைகளை மறந்துவிடுவாள்; குரோதம் மற்றும் வஞ்சகத்தை தன் உள்ளத்திலிருந்து தூக்கி எறிந்துவிடுவாள்.

இத்தகைய பண்புகள் இருப்பதால் முஸ்லிம் மனைவி, மனைவியர்களிலேயே வெற்றிமிக்கவளாக விளங்குவாள். ஆணுக்கு அல்லாஹ் வழங்கும் மிகப்பெரிய அருட்கொடைகளில் ஒன்றாக; நிகரில்லா இன்பமாகத் திகழ்வாள்.

நபி (ஸல்) அவர்கள் கூறியது எவ்வளவு உண்மையாக இருக்கின்றது! "உலகம் அனைத்தும் இன்பம்தான். உலக இன்பத்தில் மிகச் சிறந்தது நல்ல பெண் ஆவாள்"

(ஸஹீஹ் முஸ்லிம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமியப் பார்வையில் திருமணமும் மனைவியும்

அஷ்ஷேய்க் முஹம்மத் அலி - அல்ஹாஷிமி -

இஸ்லாமியப் பார்வையில் திருமணமென்பது மனதில் அமைதியையும் இதயத்தில் உறுதியையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தக் கூடியதாகும். அது ஆண், பெண்ணிடையே அன்பையும், நேசத்தையும், கருணையையும் நிலைத்தோங்கச் செய்கிறது. இதன்மூலம் கணவன் மனைவிக்கிடையில் அன்பான, அமைதியான குடும்ப வாழ்வு ஏற்பட்டு ஒரு தூய்மையான இஸ்லாமிய சந்ததி உருவாக வழி பிறக்கிறது.

ஆண், பெண்ணிடையே அமைந்த இந்த இயற்கையான தொடர்பை மிக அழகிய முறையில் திருமறை குர்ஆன் வர்ணித்துக் காட்டுகிறது. இருவருக்குமிடையே புரிந்துணர்வையும் பரஸ்பர அன்பையும் மன அமைதியையும் திருமண உறவு ஏற்படுத்துகிறது என்று அருள்மறை கூறுகிறது.

(நீங்கள் சேர்ந்து வாழக்கூடிய உங்கள்) மனைவிகளை, நீங்கள் அவர்களிடம் மனநிம்மதி பெறுவதற்காக உங்களிலிருந்தே அவன் படைத்து உங்களுக்கிடையில் அன்பையும் நேசத்தையும் உண்டுபண்ணியிருப்பதும், அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும். சிந்தித்து உணரக்கூடிய ஜனங்களுக்கு, இதிலும் (ஒன்றல்ல) நிச்சயமாக (பல) அத்தாட்சிகள் இருக்கின்றன.

(அல்குர்ஆன் 30 : 21)

திருமணம் என்பது இருவரிடையே ஏற்படும் ஒரு பலமான உறவாகும். இவ்வுறவின் மூலமாக ஆண், பெண்ணை அல்லாஹ் உறுதியுடன் ஒன்றிணைக்கிறான். கருணையும், அன்பும், பாசமும் நிறைந்த இந்த இல்லறத்தில் இவ்விருவரும் முழுமையான நிம்மதியும், மகிழ்ச்சியும் பெறுகிறார்கள்.

இஸ்லாமிய பார்வையில் நற்குணமுள்ள மனைவி இவ்வுலக வாழ்வில் இனிமை சேர்ப்பவளாகவும் அல்லாஹ்வின் மகத்தான அருட் கொடையாகவும் இருக்கிறாள். ஏனெனில், வாழ்வில் துன்பத்தையும் சோதனைகளையும் சந்திக்கும் கணவன் இல்லம் திரும்பும்போது அவளிடம் நிம்மதியையும், மனஆறுதலையும், மகிழ்ச்சியையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைகிறான். இம்மகிழ்ச்சிக்கு இணையாக உலகில் வேறெதுவும் இருக்க முடியாது.

இதுபற்றி நபி (ஸல்) அவர்களின் கூற்று எவ்வளவு உண்மையானது! "உலகம் அனைத்தும் இன்பமானது. அதில் தலைசிறந்த இன்பம் நற்குணமுள்ள மனைவி." **(ஸஹீஹ் முஸ்லிம்)**

இதுதான் தொலைநோக்குப் பார்வை கொண்ட இஸ்லாமின் திருமணம் பற்றிய உயர்ந்த கண்ணோட்டமாகும். பெண்மையின் மாண்பை இஸ்லாம் இவ்வாறே உயர்த்திக் காட்டுகிறது.

## யாருக்கு பெருநாள்?

எவன் உண்ணவும் பருகவும் மாத்திரம் செய்தானோ அவனுக்கு உண்மையான பெருநாளில்லை. (அதாவது) ரமழான் மாதத்தில் நோன்பு நோற்காமலும், நல்ல காரியங்களைச் செய்யாமலும் இருந்து விட்டு, பெருநாளன்று நல்ல உணவுகளையும், ஷர்பத்துக்களையும் விசேஷமாகத் தயார் செய்து உட்கொள்வது பெருநாளன்று!

எவன் அல்லாஹ்விற்காக நன்மையான காரியங்களை அதாவது மனம், மெய், மொழிகளின் சுத்தியுடன் செய்தானோ அவனுக்குத்தான் உண்மையான பெருநாள்.

புதிய வஸ்திரங்களை அணிந்து கொள்வோருக்கு ஈது பெருநாளில்லை. (அதாவது) வருடமெல்லாம் அஞ்சிப் பேணாமல் இருந்து விட்டு பெருநாளன்று மட்டும் நல்ல வஸ்திரங்களை வாங்கிக் கொள்வது உண்மையான பெருநாள் ஆக மாட்டாது. எனினும், அல்லாஹ்* தஆலாவால் அச்சமூட்டி அறிவிக்கப்பட்டவற்றை அஞ்சிப் பேணி நடந்தவர்களுக்கே ஈதுப் பெருநாள் உண்டு.

ரமழான் மாதத்தில் நோன்பு நோற்காமலும், தௌபா - இஸ்திஃபார் செய்யாமலும் இருந்து விட்டு பெருநாளன்று மாத்திரம் தம் வீட்டில் (வாசனைக்காக) ஊதுபத்திகளை கொளுத்துபவர்களுக்குப் பெருநாளில்லை. ஆனால், எவன் தௌபாச்செய்து, அதிலிருந்து பாவம் புரியாமலிருந்தானோ அவனுக்குத்தான் உண்மையான பெருநாள்.

ஈது நாளன்று மட்டும் உணவுகளைத் தயார் செய்து அளிப்பவர்களுக்கு உண்மையான பெருநாளில்லை. ஆனால் (அதற்கு முந்திய ரமழான் மாதத்தில்) தம்மாலியன்ற வரை நன்மை புரிய முயன்றவர்களுக்குத் தான் உண்மையான பெருநாளாகும்.

உலக அலங்காரங்களைக் கொண்டு (அன்றைய தினம் தங்களை) அலங்கரித்துக் கொள்பவருக்கு ஈதுப் பெருநாளில்லை. ஆனால் தக்வா உள்ளவர்களுக்கே உண்மையான ஈதுப் பெருநாள்.

பெருநாளன்று ஈதுகாவிற்குச் செல்ல வாகனங்களின் மீது ஏறுபவர்களுக்கு உண்மையான பெருநாளில்லை. ஆனால், தங்களுடைய குற்றச் செயல்களைத் தவிர்த்தவர்களுக்கே உண்மையான பெருநாள் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனின் சிறப்பு

மாமேதை இமாம் கஸ்ஸாலி

மனிதன் சிறப்புள்ளவன்; மற்றப் படைப்பினங்கள் அனைத்தையும் விட மேலானவன். பாய்ந்து வரும் புலிக்கும் கீறிக் கிழிக்கும் சிங்கத்துக்கும் அவன் தாழ்ந்தவனல்லன். உலகமும் அதிலுள்ள அனைத்தும் அவனுக்காகவே படைக்கப்பட்டிருக்கின்றன. மனிதனிடம் இத்துணைச் சிறப்பு ஏற்படுவதற்கு காரணம் என்ன? எண்ணிப்பாருங்கள். மனிதனிடம் தனிச்சிறப்பு ஒன்றுண்டு. அதன் விளைவால்தான் அவன் மற்ற அனைத்தையும்விட உயர்ந்து நிற்கிறான்.

மனித இனத்திற்கு உள்ளம் என்று ஒரு பொருள் இறைவனால் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது மிகச் சிறப்பு வாய்ந்த ஒன்று. அது சிறப்புற்று விளங்கினால் மனிதன் சிறப்புற்று விடுவான். அது சீர்குலைந்தால் மனிதன் சீர்குலைந்து விடுவான். அதற்கு இறைவனையும் அவன் பேராற்றலையும் அறியும் சக்தியுண்டு. இந்தச் சக்தி மனிதனின் அவயங்களில் வேறு எதற்கும் கிடையாது.

கண்கள் அனைத்தையும் பார்க்கின்றன. மண்ணில் முளைக்கும் புற்பூண்டுகளையும் விண்ணில் முளைக்கும் விண்மீன்களையும் அவை பார்க்கின்றன. ஆனால் அவற்றிற்கு இறைவனைப் பார்த்தறியும் ஆற்றல் கிடையாது.

இறைவனின் உருவத்தையோ அவன் செயல்முறைகளையோ இந்தக் கண்கள் பார்த்தறியமாட்டா. உருவமும் உறுப்பமைப்பும் இல்லாத அவனை உங்களால் எப்படித்தான் கண்டுணர முடியும்! இதற்கு உங்கள் புறக் கண்களை ஏன் வீணாகப் பயன்படுத்துகிறீர்கள்? ஆனால் இறைவனைப் பார்ப்பதற்கு உங்களிடம் வேறொரு கண் உண்டு. அதற்கு புறக்கண் என்று பெயரிடமுடியாது. உங்கள் மனக் கண்ணைத் திறந்து பாருங்கள். அந்தக் கண் புறக்கண்ணை விடச் சக்தி வாய்ந்தது. புறக்கண்கள் எதிரிலுள்ளவற்றையும் அண்மையிலுள்ளவற்றையும் மட்டுமே பார்த்தறிகின்றன. தூரத்திலுள்ளவை, பின்னாலிருப்பவை, நாளைக்கு நடக்கப் போகிறவை, நுண்ணிய அமைப்பைப் பெற்றவை இவற்றை உங்கள் புறக் கண்களால் கண்டறிய முடியாது.

ஆனால் இவை அனைத்தையும் உங்கள் மனக்கண் எளிதில் பார்த்துத் தெரிந்து கொண்டுவிடும். இறைவனைப் பார்க்கும் ஆற்றல் இந்தக் கண்ணுக்குத்தான் உண்டு.

உங்கள் காதுகள் இன்னிசையையும் கூப்பாடுகளையும் கேட்கின்றன. ஆனால் இந்தச் செவிகளின் உதவியால் உங்களால் இறைவனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சை கேட்க முடியுமா? நிச்சயமாய் முடியாது. எழுத்தோ மொழியோ இல்லாமல், வார்த்தையோ குரலோ இல்லாமல் பேசப்படும் இந்தப் பேச்சை நீங்கள் கேட்க விரும்பினால், உங்கள் மனச் செவிக்குத் திறமையூட்டுங்கள்.

இப்படி மனிதனின் உறுப்புக்கள் அனைத்தையும் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வாருங்கள். இறைவனை அறியும்பேறு மனிதனின் அவயங்களில் எதற்கும் கிடையாது - உள்ளம் ஒன்றைத் தவிர்த்து.

இந்தச் சிறப்பு மனிதனிடம் இருப்பதால்தான் அவன் மற்றப் படைப்புகள் அனைத்தையும்விடச் சிறந்து விளங்குகிறான். உள்ளம்தான் இறைவனை அறிகிறது. அதுதான் அவனை நெருங்குகிறது. அதுவேதான் இறைஞானம் அனைத்தையும் தனக்குள் சேகரித்துக்கொள்ள முயற்சி செய்கிறது. அதைத் தவிர்த்து மற்ற அனைத்தும் அடிமைகளைப் போல செயலாற்று கின்றன.

அரசன் சேவகனை வேலை வாங்குகிறான். பணக்காரன் பணியாளைப் பயன்படுத்துகிறான். தொழிலாளி கருவியை உபயோகிக்கிறான். இதே போன்று உள்ளம் என்ற சக்திவாய்ந்த அரசன் மற்ற உறுப்புக்கள் அனைத்தையும் அடக்கியாண்டு வேலை வாங்குகிறான். அதன் கட்டளையை மீறும் துணிவு கண்ணுக்கும் நாவுக்கும் கிடையாது. அதன் தீர்ப்பை மாற்றும் துணிவு காலுக்கும் காதுக்கும் கிடையாது. அதன் அடக்கு முறையைத் தகர்த்தெறியும் துணிவு எந்த உறுப்புக்கும் கிடையாது. உறுப்புக்கள் அனைத்தும் உள்ளத்தின் கட்டளையைத்தான் பின்பற்றியாக வேண்டும். மனத்தின் ஆட்சி மனிதனின் உடல் முழுவதும் வியாபித்து நிற்கிறது.

அது எப்போதுமே தூய்மையுடனிருக்க வேண்டும். இறைவன் மீது அது பேரன்பு கொண்டால், அந்த அன்பின் எதிரொலியாக அது மற்ற அனைத்தையும் மறந்துவிட்டால், இறைவனின் பேரன்பு அதற்குண்டு. இறைஞானம் பொங்கிப் பெருக வசதியுண்டு. அது தீய வழியில் திரும்பிவிட்டால், இறைவனின் வெறுப்பு அதுற்குண்டு. அப்புறம் இறைஞானம் அந்த உள்ளத்தில் ஒளி விடுவதற்கு வழியே இல்லை! மனத்துக்குத்தான் தண்டனை அளிக்கப்படுகிறது; மனம்தான் வெகுமதியையும் பெறுகிறது. நல்லதைச் செய்யும் மனம் நன்மை யடைகிறது; தீமையைச் செய்யும் மனம் தண்டனைக்குள்ளாகிறது.

உங்களைக் கெட்டவர் என்று நான் தீர்மானிப்பதானால், உங்கள் மனத்தையே நான் முதலில் ஆராய வேண்டும். உங்களைப்பற்றி நீங்களே என்ன எண்ணுகிறீர்கள்? நெஞ்சில் கைவைத்துப் பாருங்கள். உங்கள் மனம் புனிதத் தன்மை அடையும்வரை உங்களுக்குப் புனிதமானவர் என்ற பெயர் பொருந்தாது. நஞ்சூட்டப்பட்ட தேனை யார்தான் விரும்பப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகிறார்கள்? உங்கள் மனத்தில் நச்சுத் திட்டம் உருவாகிக் கொண்டிருக்கும்போது. உங்கள் சிரிப்பிலுள்ள தித்திப்பு யாருக்குப் பயன் தரப்போகிறது.

இறைவனுக்கு வழிபட்டு நடப்பதாக நீங்கள் சொல்கிறீர்கள். உண்மையில் உங்கள் உடலில் எந்தப் பகுதி இறை வணக்கம் புரிகிறது தெரியுமா? உங்கள் உள்ளம் தான் இறைவணக்கம் புரிகிறது. இறைவனை வணங்குவதும், அவனுக்கு மாற்றம் செய்வதும் அதுதான். உங்கள் மனத்தில் பக்தி உருவாகும்பொழுது அதன் ஒளிக்கற்றைகள் அவயங்களில் படிகின்றன. உங்கள் மனத்தில் தீய எண்ணம் உருவாகும்போது அதற்கொப்ப உங்கள் அவயங்கள் செயல்புரிகின்றன. மனத்தில் பக்தி ஏற்படாமல் உங்களால் இறை வணக்கம் புரிய முடியுமா? மனத்தில் தோன்றும் தீய எண்ணமும் நல்லெண்ணமும் உடனுக்குடன் அவயங்களால் செயல்படுத்தப்படுகின்றன. உண்மையில் 'பக்தன்' என்ற பெயர் மனத்துக்குத்தான் பொருந்தும். மனத்தின் தூண்டுதலால்தான் இறைவணக்கம் உருப்பெறுகிறது. 'நாத்திகன்' என்ற பெயரும் மனத்துக்குத்தான் பொருந்தும். மனத்தின் உணர்வால் தானே மனிதன் நிலையின்றித் தடுமாறுகிறான்? அதன் கட்டளையினால் தானே அவன் அறிவுக்குப் பொருந்தாத செயல்களில் ஈடுபடுவான்?

'பானையில் உள்ளதுதான் அகப்பையில் வரும்!' என்று ஒரு முதுமொழியுண்டு. உண்மைதானே! மனத்திலுள்ளது தானே செயலில் வர முடியும்? தான் எண்ணாத ஒன்றை, தான் சிந்திக்காத ஒன்றை எந்த மனிதனும் செய்யப்போவதில்லை.

உங்களுடைய மனம் எப்படி இருக்கிறது? அதைப் பற்றி நீங்கள் நன்கு தெரிந்து கொள்ளவேண்டும். மனத்தை நீங்கள் அறிந்துகொண்டால், இலகுவாக இறைவனை அறிந்துகொண்டு விடுவீர்கள். மனத்தை அறிந்து கொள்ளாதவர்கள் இறைவனை அறிந்து கொள்ள முடியாது. உங்கள் மனத்தைப் பற்றியே உங்களால் தெரிந்துகொள்ள முடியவில்லை என்றால், மற்றவர்களைப் பற்றியும், மற்றவற்றைப் பற்றியும் உங்களால் எப்படி அறிந்துகொள்ள முடியும்?

பெரும்பாலோர் இந்தத் துறையில் பெரிதும் பின் தங்கிவிட்டார்கள் என்றே நான் எண்ணுகிறேன். அவர்கள் தம் மனத்தைப் பற்றியும் அதன் உணர்வுகளைப் பற்றியும் எண்ணிப் பார்ப்பதில்லை, இதனால் அவர்கள் தம் மனத்தைப்பற்றியே அறிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள். அவர்கள் வேறு திக்கில் பிரவேசிக்கிறார்கள். அவர்களின் மனம் வீணான எண்ணங்களுக்கு அடிமையாகிக் கிடக்கிறது.

அது சில வேளை சிந்தனையின் சிறப்பால் வானோக்கி உயர்கிறது. இன்னும் சில சமயம் உணர்ச்சிகளுக்கு அடிமையாகி அதல பாதாளத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்து விடுகிறது. எல்லாம் வல்ல இறைவன் மனிதனின் மனத்தை எப்படியெல்லாம் ஆட்டிப் படைக்கிறான்! அவனுடைய சக்திக்கரங்களில் சிக்கிக்கொண்டு மானிட உள்ளங்கள் தடுமாறுகின்றன.

உங்கள் மனத்தை நீங்கள் சுத்தமாகத் தெரிந்து கொள்ளுங்கள். அப்போதுதான் உங்களால் இறைவனைத் தெரிந்துகொள்ள முடியும். இந்தக் காரியத்தை அலட்சியம் செய்துவிடாதீர்கள். "அவர்கள் இறைவனை மறந்தார்கள். எனவே இறைவன் அவர்களின் மனநிலையை அவர்களுக்கு மறக்கடித்துவிட்டான்!" என்ற திருக்குர்ஆனின் கண்டனக் குரலுக்கு இலக்காகி விடாதீர்கள். இந்தக் கண்டனத்திற்கு இலக்கானவர்கள் பலர் இன்றும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களைப் பொருட்படுத்தாதீர்கள். ஏனெனில் திருக்குர்ஆன் அவர்களைக் "குற்றம் புரிபவர்கள்" என்று குறிப்பிடுகிறது.

மனத்தைப்பற்றியும் அதன் தன்மைகளைப் பற்றியும் அறிந்துகொள்வது மகத்தானதொரு காரியமாகும். இதற்கு மார்க்கத்தில் பாராட்டுண்டு. இந்த அறிவை மார்க்கத்திற்கே ஆணிவேர் என்றும் குறிப்பிடலாம்.

"இஹ்யாவு உலூமித்தீன்" என்ற இந்தப் பெருநூலை இரண்டு பிரிவுகளாகப் பிரித்திருக்கிறேன். முதற் பிரிவில் மட்டும் 20 சிறிய நூல்கள் இடம் பெற்றிருக்கின்றன. அவற்றில் 10 நூல்கள் வணக்க வகைகளையும் எஞ்சிய 10 நூல்கள் பழக்க வழக்கங்களையும் விவரிக்கின்றன. மனிதனின் அவயவங்களோடு சம்பந்தப்படும் காரியங்கள் அனைத்தும் இந்த இருபது நூல்களில் விரிவாக ஆராயப்படுகின்றன.

உங்கள் கையிலிருக்கும் இந்நூல் இரண்டாம் பிரிவில் முதலாவதாக இடம் பெற்றிருக்கிறது. இந்தப் பிரிவிலுள்ள இருபது நூல்களும் மனத்தில் தோன்றும் நல்ல குணங்களையும் தீய குணங்களையும் விவரிக்கின்றன. எந்தக் குணத்தினால் அவன் அதல பாதளத்திற்குப் போகிறான் என்பதை அடுத்துவரும் நூல்களில் நீங்கள் விரிவாகக் காணலாம்.

இந்த இருபது நூல்களில் இரண்டு நூல்களுக்கு நான் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறேன். 1. 'உள்ளத்தின் விந்தைகள்' 2. 'உளத் தூய்மை!' 'உள்ளத்தின் விந்தைகள்' என்ற இந்த நூலில் மனத்தைப் பக்குவப்படுத்துவதற்குரிய வழிவகைகள் தெளிவாகக் காட்டப்படுகின்றன. இந்த இரண்டு நூல்களையும் எழுதி முடித்த பிறகு, மனிதனின் குணங்கள், உணர்ச்சிகள் ஒவ்வொன்றையும் தனித் தனியே ஆராய்வோம் - இன்ஷா அல்லாஹ்!

இப்போது நாம் உள்ளத்தைப் பற்றி ஆராய்வோம். அதைச் சாதாரணமாக எண்ணிவிடாதீர்கள். அற்புதமான சக்திகள் பல அதனுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்திருக்கின்றன. மர்மங்கள் நிறைந்த அதைப் பெரும்பாலோர் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை. ஏனெனில், உள்ளத்தின் அடித்தள மர்மங்களையும் அற்புதங்களையும் புரிந்து கொள்வது அப்படி ஒன்றும் இலகுவான காரியமல்ல. அவற்றைப் புரிந்து கொள்வதில் யாருக்கும் சிரமம் ஏற்படத்தான் செய்யும். எனவே நாம் அவற்றை எல்லாம் உவமானங்களின் மூலம் ஆராய்வோம். உவமானத்துக்கு மர்மம் துலக்கும் சக்தியுண்டு.

மனிதனைக் குறிப்பாக நான்கு பொருள்கள் ஒன்று சேர்ந்து இயக்குகின்றன. இயங்கிக் கொண்டிருக்கும் மனிதனிடம் இந்த நான்கு பொருள்களும் ஒருங்கே அமைந்திருக்கின்றன. உள்ளம், உயிர், உணர்ச்சி, பகுத்தறிவு ஆகிய இந்த நான்கும் மனிதனிடம் பல்வேறு விளைவுகளை ஏற்படுத்துகின்றன.
இவற்றின் பொருள்களை நீங்கள் சுத்தமாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான், உங்களால் இந்த நூலைத் தெளிவாக உணர முடியும்.

இவை ஒவ்வொன்றும் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைப் பெற்றிருக்கின்றன. சில வேளை ஒரு வார்த்தையின் பொருள் வேறொரு வார்த்தையின் பொருளாக உபயோகிக்கப்படுகிறது. இப்படியெல்லாம் இந்த நான்கு வார்த்தைகளும் குழப்பத்தை ஏற்படுத்துவதால் தான் இவற்றைப் பற்றி நீங்கள் முதலில் தெரிந்து கொள்ளவேண்டும் என்று நான் சொல்கிறேன்.

## நாளை இருப்பதை யார் அறிவார்

நோன்புப் பெருநாள் நெருங்கிக் கொண்டிருந்தது. டமஸ்கஸ் நகரமே பெருநாளைக் கொண்டாட தயாராகிக் கொண்டிருந்தது.

ஸிரியா நாட்டு கலீ∴பா உமர் இப்னு அப்துல் அஸீஸின் துணைவியார் ∴பாத்திமா தம் கணவரிடம் சொன்னார் -

"இம்முறையாவது குழந்தைகளுக்கு புதிய துணிகள் வாங்க வேண்டும்."

"எனக்கும் ஆசையிருக்கிறது. ஆனால் எப்படி வாங்குவது? பணத்திற்கு எங்கே போவது?"

"உங்களுக்கு கீழே பணிபுரியும் அமீர்களும் சர்தார்களும் தங்கள் குழந்தைகளுக்கு புதிய துணிகள் வாங்குகிறார்களே?"

"உன் ஆசைகளை நிறைவேற்றும் நிலையில் நான் இல்லை. எனக்கு அரசு தரும் தினசரிப் படியில் இது சாத்தியமில்லை!.

"அப்படியானால் ஒரு காரியம் செய்யுங்கள். உங்களின் ஒரு வார தினசரிப் படியை முன்பணமாகப் பெறுங்கள். அதில் குழந்தைகளுக்கு துணிமணிகள் வாங்குவோம்."

"∴பாத்திமா! நான் அப்படி முன்பணம் வாங்குகிறேன் என வைத்துக் கொள். நான் அதுவும் கலீ∴பாவாக பணி புரிவேன் என எப்படியும் உறுதியாகக் கூற முடியும்? திருப்பிக் கொடுக்க முடியாத கடனாளியாக இருப்பதனை விட – அப்படி இறப்பதனை விட – நம் தேவைகளை குறைத்துக் கொள்வது சிறந்தது அல்லவா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41ம் பக்க தொடர்...

உலகில் நாம் வாழும் இந்த வாழ்வும், அல்லாஹ் அளித்த பெரும் வாய்ப்பாகும் இந்த வாழ்வை வாழ்வாங்கு வாழ நாம் வழிவகுத்தல் வேண்டும். மரணம் என்னும் நிலைவந்தால் வாழ்வு முடிந்துவிடும்.

வையகத்து மயக்கத்தில் மையத்தைப் போன்றவனே! கால்வைத்து இறங்குவதெல்லாம் கப்ரடியை நோக்கியே! படைப்பெல்லாம் அழிந்துபோகும் உணர்ந்து பார்! தெளிந்த சிந்தையுடைய எவரும் இந்நிலையில் மகிழ்வாரா? என்ற அழகிய அரபிக்கவிதை இளமையில் முர்ஷித் ஓதுகையில் சிந்தனையில் நிலைத்தது.

செல்வம் மனிதனுக்கு அல்லாஹ் அளித்த பெரும் கொடையாகும். தர்மம் செய்து கொடை கொடுத்தால் அது மென்மேலும் கூடும். தர்மத்திற்காகக் கொடுக்கக் கொடுக்க அது கூடுமே தவிர குறையாது. சிறுமை மிகு வறுமை வருமுன் அருமை மிகு செல்வத்தை பாதுகாத்தவன் அறிவுள்ளவனாகும்.

இந்த உலகம் - உலக சமுதாயம் - நான்கு தூண்களில் கட்டுப்பட்டு இயங்குகின்றது. உலமாக்களின் வழிகாட்டுதல், "வீரர்களின் தியாகம், செல்வந்தர்களின் தயாளம், நல்லடியார்களின் இறையச்சம்" என்ற இன்றைய சிந்தனையாளரின் கருத்து இங்கு பொருத்தமானது.

"உலமாக்களின் வாழ்வையும், தியாகிகளின் மரணத்தையும், அல்லாஹ்வின் அன்பர்களின் சேர்க்கையையும், இறை தூதர்களோடு சுவர்க்கம் புகும் வாய்ப்பையும் வழங்குவாயாக" என்ற இறை நேசர்களின் துஆ பிரார்த்தனை இங்கு நினைவு கூரப்படல் வேண்டும்.

இவர்களின் எத்தனை வகைகள்; எத்தனையோ வண்ணங்கள் மரங்களில், செடிகளில், கொடிகளில் பல வகைகள்;

உயிரினங்களின் வண்ணங்கள் எண்ண முடியாதவை. வானில் பறப்பன பல்வகை; நிலத்தில் ஊர்வன இன்னும் பல; நீரினுள் வாழ்பவை எண்ணிலடங்கா. எறும்பு முதல் யானை வரை எத்தனை மாற்றம்; கரும்பு முதல் கனிகள் வரை எத்தனை சுவை?

அன்பு மனிதனே! அல்லாஹ் உனக்காக இந்த உலகில் அமைத்துள்ள அன்பளிப்புக்களை எண்ணிப்பார். உன் தேவைக்காக, உன் பாவனைக்காக அவன் தந்துள்ளவற்றைக் கணக்கிட்டுப் பார்க்கவும். இயலாதவாறு அவன் உன் மேல் கிருபை செய்துள்ளான். "இறைவா! நீ எதையும் வீணாகப் படைக்கவில்லை" என்ற அருள்மறையின் உண்மை உன் சிந்தனையில் நிலைக்கட்டும்!

அல்லாஹ் அருளட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்று வளாகம்

## பாறை மீது வீற்றிருந்த கிள்ரு (அலை)

S. முஹம்மத் பஹிர் - B.Sc.

உணவை எடுப்பதற்காகக் கூடையினுள் கையைவிட்ட யூஷஃ. (அலை) அவர்கள் திடுக்கத்துடன் கையை வெளியே எடுத்தார்கள்.

அதுகண்ட மூஸா (அலை) அவர்கள், "என்ன ஆயிற்று?

ரொட்டி இல்லையா என வினவ,

அதற்கு யூஷஃ. (அலை) "ரொட்டி இருக்கிறது மீனைத்தான் காணவில்லை" என்று கூறினார்கள்.

அது கேட்ட மூஸா (அலை) அவர்களுக்கும் வியப்பு மேலிட்டது.

எனவே அவர்கள், "காணாமற்போய்விட்டதா? எந்த இடத்தில் காணாமற்போனது என்பதைக் கூறமுடியுமா? என்று வினவினர்.

அப்பொழுது இளைஞரான யூஷஃ. (அலை) "நாம் இருவரும் அக்கற்பாறைமீது அமர்ந்திருந்தபொழுது நிகழ்ந்த அற்புதத்தை நீங்கள் பார்க்கவில்லையா? அம்மீன் திடீரென உயிர் பெற்றுக் கடலில் குதித்து மறைந்தது. இப்பொழுதுதான் என் நினைவுக்கு வருகின்றது. அதனை நான் தங்களிடம் கூறத்தான் எண்ணியிருந்தேன். எனினும் தங்களிடம் கூறாதவாறு ஷைத்தான் என்னை மறக்கடித்து விட்டான்" என்று கூறினர்.

திருமறையில் இவ்வுரையாடல்,

"அதற்கவர், அக்கற்பாறையில் நாம் தங்கியிருந்த வேளையில் (நிகழ்ந்த அதிசயத்தை) நீங்கள் பார்த்தீர்களா? நிச்சயமாக நான் (நம்முடன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வந்த மீனை மறந்துவிட்டேன். அதனை நான் (உங்களுக்குக்) கூறுவதை ஷைத்தானையன்றி (வேறெவரும்) எனக்கு மறக்கடிக்கவில்லை. (அவ்விடத்தில் அது) கடலில் (செல்ல) அதிசயமான வகையில் தன் வழியை அமைத்துக்கொண்டது என்று கூறினார்."

(திருக்குர்ஆன் 18 : 63)

அது கேட்ட மூஸா (அலை) அவர்களின் பசி மயக்கமும், பயணக் களைப்பும் ஓடி மறைந்தன.

மகிழ்ச்சி மீக்குற்ற அவர்கள், "நாம் தேடிவந்த இடம் அதுதான். அதுதான்! அதுதான்" என்று கூறித் தாங்கள் நடந்துவந்த அடிச்சுவடுகளைப் பின்பற்றியவாறு அக்கற்பாறையைத் தேடியவர்களாகத் திரும்பிச் சென்றார்கள்.

(திருக்குர்ஆன் 18 : 64)

இளைஞரான யூஷ.். (அலை) அவர்களும், அவர்களின் பின்னே தொடர்ந்து ஓடினார்கள்.

இறுதியாக அவ்விருவரும் அக்கற்பாறையை அடைந்த பொழுது, அங்கு பச்சைத் தலைப்பாகை அணிந்த ஒருவர் வீற்றிருந்து இறைவனை வணங்கிக் கொண்டிருப்பதை அவர்கள் கண்டனர். அவரே கிள்ரு (அலை).

அவ்விருவரும் (அவ்விடத்தில்) நம் அடியாரில் ஒருவரைக் கண்டார்கள். அவருக்கு நம்முடைய (சொந்தமான) அருளை அளித்து, நம்முடைய (சொந்தமானதொரு) ஞானத்தையும் நாம் அவருக்குக் கற்பித்திருந்தோம்."

(திருக்குர்ஆன் 18 : 65)

கிள்ரு (அலை) அவர்களைப் பற்றி அல்லாஹ் கூறுகின்றான்.

அவ்விருவரும் தம்மை நோக்கி வருவதைத் கண்ட கிள்ரு (அலை) அவர்கள் ஒரு துணியால் தம்மைப் போர்த்தி மூடிக்கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இன்ன நோக்கத்திற்காகத்தான் அவர்கள் தம்மிடம் வந்துள்ளனர் என்பதையும் அவர்கள் உணர்ந்து கொண்டார்கள்.

தம் தொழுகையை கிள்ர் (அலை) அவர்கள் முடித்துக்கொண்டபின்,

மூஸா (அலை) அவர்கள் 'சலாம்' உரைத்தனர்.

அதற்கு அவர்களும் பதில் சலாம் கூறிவிட்டு நீர் யார்? என்று வினாக்கணை தொடுத்தனர்.

அதற்கு மூஸா (அலை) அவர்கள், "நான் மூஸா ஆவேன். தங்களிடம் அறிவு பெறுவதற்காக வந்துள்ளேன்" என்றனர்.

அது கேட்ட கிள்ரு (அலை) அவர்கள், நீர் இஸ்ரவேலர்களின் மூஸாவா? என்று வினவினர்.

அதற்கவர்கள், "ஆம்!" என்றனர்.

அவ்விருவருக்கும் இடையே நிகழ்ந்த இச்சந்திப்பு பற்றி வேறுவிதமாகவும் வரலாற்று நூல்களில் காணப்படுகிறது.

அது வருமாறு :

பாறைமீது கிள்ரு (அலை) அவர்கள் உறங்கிக் கொண்டிருந்தனர்.

அப்பொழுது அங்கு வந்த மூஸா (அலை) அவர்கள், அவர்களுக்குச் சலாம் உரைத்தனர்.

அதனைச் செவியுற்ற கிள்ரு (அலை) அவர்கள் "வ அலைக்கு முஸ்ஸலாம் யாநபி பனீ இஸ்ராயீல்!" என்று பதிலுரைத்தனர்.

அது கேட்டு வியப்புற்ற மூஸா, என்னைத் தாங்கள் எவ்வாறு அறிந்து கொண்டீர்கள்? என்று வினவ,

உமக்கு எவன் என்னை அறிவித்தானோ அவனே எனக்கு உம்மையும் அறிவித்தான் என்று கிள்ரு (அலை) அவர்கள் விடையளித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்கள் இஸ்ரவேலர்களின் நபி என்பதை அறிந்துகொண்ட கிள்ரு (அலை) அவர்கள், "உமக்கு பனூ இஸ்ராயீல்களிடம் அதிக வேலை இருக்குமே! என்று கூறினர்.

அப்பொழுது மூஸா (அலை) அவர்கள், உண்மைதான். எனினும் அறிவு பெறுவதற்காக அல்லாஹ் என்னைத் தங்களிடம் அனுப்பியுள்ளான்." என்று கூறினார்கள்.

இதன் பின்னர் ஹஜ்ரத் யூஷ.் இப்னு நூன் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு தம் இருப்பிடம் திரும்பினார்கள்.

# இப்படியொரு காலம் வரும்!

**நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றவைகள் : -**

**"ஓ... அலீயே! என் உம்மத்தாருக்கு விரைவில் இப்படியொரு காலம் வரும். அக்காலத்திலே...**

1. ஜனங்கள் ஆணவம், அகம்பாவம் முதலிய துர்குணங்கள் கொண்டவர்களாக இருப்பார்கள்.
2. கல்வி கற்பதை வெறுத்து அறிவிலிகளாகத் திரிவார்கள்.
3. அநீதம், அக்கிரமம், மோசடி செய்வதையே விரும்புவார்கள். நீதம் (உண்மை) பேசத் தயங்குவார்கள்.
4. நல்லவற்றை கெட்டவையாகவும், கெட்டவற்றை நல்லவையாகவும் கருதுவார்கள்.
5. முஸ்லிம்கள் இழிவாகவும், கா.்.பிர்கள் சங்கைவான்களாகவும் கருதப்படுவார்கள்.
6. முஸ்லிம்களிடையே ஒற்றுமை குன்றி வேற்றுமை வேரூன்றி நிற்கும்.
7. மஸ்ஜிதுகள் நடைபாதைகளாகவும், தூங்குமிடமாகவும் பயன்படுத்தப்படும்.
8. முஸ்லிம்கள் ஒருவருக்கொருவர் பகைத்துக் கொண்டு சர்ச்சைகள் செய்து சபித்துக் கொள்வார்கள்.
9. ஐங்காலத் தொழுகைகளை அலட்சியமாகக் கருதி விட்டு விடுவார்கள்.
10. ஏழைகள் கேவலமாகக் கருதப்படுவார்கள். (இன பந்துக்களாக இருந்தாலும்)
11. சிரியோர் உள்ளங்களில் பெரியோர் பற்றிய பயம் இராது.
12. பொறாமை அதிகமாகும். இதனால் ஒரு மகன் தன் தகப்பன் மரணிப்பதை விரும்புவான்.
13. உண்மை குறைந்து பொய்மை மிகைத்து விடும்.
14. மது அருந்தும் பழக்கம் சர்வ சாதாரணமாகி விடும்.
15. வட்டி, இலஞ்சம் (கையூட்டு) முதலியன சர்வ சாதாரணமான செயலாகக் கருதப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருந்துக்கான கவிதைகள்

# மௌத்தே நீ யார்?

இக்குவலய வாழ்வின் முடிவுரை!
அழியா ஆஹிரத் வாழ்வின் தொடக்கவுரை!

திரும்பாப் பயணம் செல்லும் பயணி!
வைத்தியர் நிருத்தா கடும் நோய்!

சிரிப்பை மெல்லத் திருடிய திருடி!
அழுகையை ஆரம்பித்த பிறியாவிடை!

பணத்தால் நிருத்தாத மகா வெற்றி!
மறுமையை நாடும் மறுமை நேசன்!

உறவுகளை கத்தரிக்கும் கத்தரிக்கோல்!
மறுமை உறவை நாடிடும் நாட்டான்!

அடியான் என்றேனும் அணுபவிக்கும் துன்பம்!
திருப்பி வீசா கடும் சூறாவளிக்காற்று!

நல்லோர் அணுபவிக்கும் இன்ப முகவரி!
கெட்டோர் அணுபவிக்கும் சொல்லொன்னா துயரம்!

*கவிநாதன் இஸ்மாயீல் M.I.M. பாரீஸ்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீனோர் நாம்...

- : சாரணாகையூம் : -

எங்களிடம்
ஆயுதமோ
அணுக்குண்டோ
இல்லவே இல்லை!

அல்லாஹ்வையும்
ரசூலையும்
சுமந்தவர்கள் நாம்!

சத்திய இஸ்லாத்தின்
நித்திய சுகந்தத்தை
சத்தாய் நுகர்ந்து
சாந்தியோடு, வாழ
சத்தியம் செய்தவர்கள்!

எங்கள் ஈமான்
எ∴கைப் போன்றது;
உலகமே கண்டு
ஓலமிடுகிறது;
கிலி கொண்டு!

நாங்கள் முஸ்லிம்கள்
எங்களுக் கென்று
உறுதியாய் வழிகாட்டும்
அல்குர்ஆனும் ஸுன்னாவும்
எங்கள் வாழ்வில்
இருக்கும் வரை,
எந்தச் சக்தியாலும்
எம்மை,
வெல்ல முடியாது!

தௌஹீதை
நிலை நாட்ட;
தரணியில் வாழ்கிறோம்!

தொல்லைகள்
தொடர்ந்தாலும்
துணிவுடன் போராடும்
திராணி பெற்ற
தீனோர் நாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வற்றாமல் தொடரட்டும்!

விருட்சமாயிந்தோமே தரணியில் நாங்கள்
விருப்புடன் புகட்டினீர்களே உரத்தை தாங்கள்
பொறுப்புடன் நல்லறிவை தந்தீர்களே நீங்கள்
பிரார்த்தனை புரிகின்றோம் நாங்கள், தங்கள்
பொறுமையான சேவை தொடர்ந்த தாயிருக்க - இறைவனிடம்
பிரார்த்தனை புரிகின்றோம் தங்கள் சேவை தொடர்ந்ததாயிருக்க.

தெண்ணராக யிருந்தயெம்மை
தெளிஞனாக மாற்றியமைத்து
துணிவாகவும் நடைபோட வைத்து
தீன்படியும் வாழவைத்தீர்களே – என்றென்றும்
தீன்படியும் வாழவைத்தீர்களே! ஆசானே.........!

கரடாயிருந்தோமே நாங்கள்
கனிவாய் பணிய வைத்தீர்களே நீங்கள்
பரிவோடு பேசி யாசையோடும்
புரிய வைத்தீர்களே அறிவை – நலமாக
புரிய வைத்தீர்களே அறிவை

விழித்திருந்து பொறுத்திருந்தெமக்கு
வாய்மைக்காட்டி அறிவூட்டி தமக்கு
விழுப்பமுள்ள மாணவராக்கியெம்மை
வாழவைத்த என்னினிய ஆசானே!
நலமாக கிட்டட்டும் நல்வாழ்வு - இறுதி நாள் மட்டும்
நலமாக கிட்டட்டும் நல்வாழ்வு

குற்றங்களில் ஈடுபட்டோமே நாங்கள்
கனிவாய் சுற்றிக்காட்டினீர்களே நீங்கள்
முற்றும் பெற்றதே அக்குற்றமும்
மிளிர்கின்றோம் மனிதர்களாய் நாமும்
வற்றாமல் தொடரட்டும் தங்கள் சேவை – அநுதினமும்
வற்றாமல் தொடரட்டும் தங்கள் சேவை

நாகரீக குழியிலே விழுந்துகிடந்தெமக்கு
நோவுபட்ட மனத்தோடு அழைந்து திரிந்தெம்மை
ஊக்கம் கொடுத்து அறிவால் மருடினீர்களே நெஞ்சை
உளமகிழ்வோடும் வாழ்வைருசிக்க வைத்தீர்களே! ஆசானே.....!
அகமுருகி கேட்கின்றோம் நாங்கள், தங்கள் சேவை நீள! – அனவரதம்
அகமுருகி கேட்கின்றோம் நாங்கள், தங்கள் சேவை நீள!

**மு. ஹரீஸ் மஃரூப்**
**குருகொட, அக்குறனை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைகள் தீர்த்திடுவாய்!...

ஏகபரம்பொருளே – நிலைத்து
எங்கும் நிறைந்தவனே
ஆகமநாயகனே – அலகில்
அன்பு சொரிபவனே

தேவைகளற்றவனே – அடியார்
தேவைகள் தீர்ப்பவனே
பூவைப்படைத்தளித்துக் – காக்கும்
பொன்மறை நாயகனே

உந்தன் உதவியின்றி – உலகில்
உயிர்கள் வாழ்வதில்லை
தந்தையில்லாதவனே – ஈன்ற
தாயுமில்லாதவனே

உன்னை வணங்குகிறோம் – உதவி
உன்னிடம் வேண்டுகிறோம்
சென்னி தரையிலுற – சஜதா
செய்து புகழுகிறோம்

நேர்வழி காட்டிடுவாய் – உனது
நேசர்வழி நடக்க
ஓர்கணமேனுமுன்னை – மறவா
உள்ளமெமக் களிப்பாய்

(நீ) நாடும் அடியவர்க்கும் – உன்னை
நாடும் அடிமையர்க்கும்
கூடும் நினதருளே – எங்கள்
குறைகள் தீர்த்திடுவாய்

*- மன்னார் உமர் அபூபக்கர் -*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்வு பெறுவோம்...!

சோதனைகளெதுவரினும் சோர்ந்துபோகா
சோகத்தை வெற்றியதன் முதலாய்க்கொண்டு
சாதித்து வாழ்வதுவே மு.ஃ.மினின் பண்பு
சாந்திநபியெமக்களித்த வழியுமதுவே

தொழிலற்றுத் துறையற்று முதலுமின்றி
துணையற்று மனமற்றோர் உதவியின்றி
வழியற்று வறுமையெமை அணைத்தபோதும்
வகையற்று வாழாது உழைத்தல் சிறப்பு

உள்ளாரும் இல்லாரும் பொல்லாரென்று
உலவிடுவோரெல்லோரும் சோதனை பலதில்
அள்ளுண்டு வாழுவது இறையின் நியதி
அவதிவரின் பொறுமையுடன் சகித்தல் மேலாம்

அண்ணலெம் பெருமானார் வாழ்வு யாவும்
அறம்செய்து இல்லாரின் துன்பம் தீர்த்து
கண்மணியாய் ஏழையராய் வாழ்ந்தும் தீனை
கருத்தாகச் செயலாற்றி வெற்றி கண்டார்

வெற்றிக்கு வழியாகத் திகழும் துன்பம்
வெளியாகும் சோதனையால் கிட்டுமின்பம்
சற்றிதனைச் சிந்தையிலே பதித்து செயலில்
சாந்தமுடன் சகித்திறையின் உயர்வு பெறுவோம்

*- மருதூர் ஜமால்தீன் -*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயமும் தெளிவும்

வழமையாக பர்லான தொழுகையை தொழுவதற்கு முன் சுன்னத்தை தொழுகிறோம். சுன்னத்துக்கும் பர்ளுக்குமிடையில் "களா" தொழக்கூடாது என்கின்றனர் சிலர். இது சரியா?

பொதுவாக "களா" தொழுகைக்கு நேரகாலம் கிடையாது. எப்போது வேண்டுமானாலும் களாவை தொழலாம். சுன்னத்தை தொழுததன்பின் களாத் தொழுகை மட்டுமல்ல, திருக்குர்ஆன் ஓதலாம், திக்ருகள் செய்யலாம், ஸலவாத்து ஓதலாம். சுன்னத்துத் தொழுதபின் பர்ளு தொழும்வரை நேரமிருக்குமானால் மேற்குறிப்பிட்ட நல்லமல்களைச் செய்யலாம். பொது மஸ்ஜித்களில் பாங்கு சொன்னதின் பின் இகாமத் சொல்வதற்கு பத்து அல்லது பதினைந்து நிமிடங்கள் எடுக்கும். இந்த இடைவெளியில் அவர்கள் வேண்டிய சுன்னத்தான அமல்களைச் செய்யலாம். களாவும் தொழலாம்.

துல்கர்னைன் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நபியாக இருந்தார்களா? மேலும் துர்கர்னைன் என்பது தான் அவரது பெயரா?

துல்கர்னைன் என்பது அவரது பட்டப்பெயர் என்பதே அனேகமான தப்ஸீர் கலை வல்லுனர்களின் கருத்தாகும். அதேவேளை அவர் ஒரு இறைநேசராக இருந்தார். இவரால் பல சீர்திருத்தங்கள் அக்காலத்தில் இடம்பெற்றன. இவரைப்பற்றிய தெளிவான தகவல்கள் திருக்குர்ஆனில் சூரதுல் கஹ்பில் 83ம் வசனம் முதல் பார்வையிடலாம். தமிழ் தப்ஸீரான அன்வாருல் குர்ஆனில் விரிவாக அவரது வரலாற்றைப் பார்க்கலாம்.

பெண்கள் பர்தா அணிவது பர்ளா, சுன்னத்தா, வாஜிபா இல்லை முஸ்தஹப்பா? பருவமெய்திய பெண்ணை பர்தா அணிய வேண்டாம் எனச்சொல்லலாமா?

பெண்கள் - அதுவும் பருவமெய்தியர் பர்தா அணிவது கட்டாயக் கடமையான பர்ழாகும். இது சம்பந்தமான ஒரு விரிவான ஆக்கம் நிதாவில் வெளியாகியுள்ளது. பர்தா அணியக்கூடிய சில பெண்கள் பர்தா முறையை முழுமையாக அனுஷ்டிப்பதில்லை. முழுமையாக முகத்தை திறந்துதான் பர்தாவை அணிவர். இந்த நடைமுறையால் பர்தா அணிவதன் நோக்கம் நிறைவடைவதில்லை. அத்துடன் இன்று பர்தா ஒரு பெஷனாக மாறிவருகின்றது. அதாவது பர்தாவில் வித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதமான டிசைன்கள், பூவேலைப்பாடுகள் காணப்படுகின்றன. சாதாரண ஆடை அணிவதற்கும், இவ்வாறான அலங்கார பர்தா அணிவதற்கும் என்ன வித்தியாசமிருக்கிறது! எனவே அலங்கார பர்தா அணிவதை பெண்கள் முற்றாக தவிர்க்கவேண்டும் இது ஒரு பர்ழான - கட்டாயமான கடமையாகும்.

📖 சிலர் கூறுகின்றார்கள், ஷாபிஈ மத்ஹபின் பிரகாரம் தொழுகை நோன்பு போன்றவை களாவானால் அவற்றை தொழவேண்டியதில்லை. மாறாக தௌபா (பாவமன்னிப்பு) செய்தால் போதுமானது. இது சரிதானா?

✍ இது ஷாபிஈமத்ஹபுக்காரர்களின் கருத்தல்ல. பொதுவாக நான்கு மத்ஹபுகளும் தொழுகை நோன்பைவிட்டால் களா அவசியம் செய்யவேண்டுமென்றே கூறுகின்றன. ஷாபிஈமத்ஹபின் தலையில் இத்தகைய ஒரு அபாண்டத்தை போடுவதே பெரும் பாவமாகும். தௌஹீத் வாதிகள்தான் இத்தகைய கருத்துக்களைக்கூறுகின்றார்கள். இது நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களது நடைமுறை செயல்பாட்டிற்கு முரணானதாகும். கட்டாயம் தொழுகை நோன்புகள் விடுபட்டால் களா செய்தே ஆகவேண்டும்.

📖 கப்ருஸ்தான், மண்ணறைகள் உள்ள பகுதியில் நாம் உள்ளே நுழைய வேண்டும் என்ற எண்ணமின்றி செல்லும் வேளையில் (வழியில்) எதுவும் ஓதவேண்டுமா?

✍ ஆம், கப்ருஸ்தான் வழியாக செல்லும்போது – வழியில் நாம் திருக்குர்ஆனின் ஏதாவது சூறாக்களையோ, குறிப்பாக சூரதுல் இக்லாஸ் - குல்ஹுவல்லாஹு அஹத் சூறாவையோ அல்லது கரங்களைத் தூக்காமல் அடக்கப்பட்டிருப்பவர்களுக்காக பிழை பொறுக்கத் தேடி துஆவோ செய்யலாம். கப்ருஸ்தானை கடக்கும்போது இதனைச் செய்யலாம். இதற்காக அங்கு நின்றுக்கொண்டிருக்கவேண்டுமென்பதில்லை.

📖 ஒரு பெண் இஃதிகாப் இருப்பதற்காக கணவனின் அனுமதி பெற வேண்டுமா?

✍ ஆம். ஒரு பெண் இஃதிகாப், பொதுவாக இஃதிகாப் இருப்பதற்கு கணவனின் அனுமதி பெற்றேயாக வேண்டும். இஃதிகாப் இருப்பது பர்ளோ சுன்னதுல் முஅக்கதாவோ அல்ல. நபில் தொழுகை, அதேபோன்று சுன்னத்தான நோன்பு இதுபோன்ற சுன்னத்தான எந்த கடமைகளுக்கும் அவற்றை நிறைவேற்ற கணவனின் அனுமதி பெற்றேயாக வேண்டும். “நான் பொதுவான சுன்னத் நபிலான நல்லமல்களை அவ்வப்போது செய்யவா” என கணவரிடம் பொதுவான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதி பெற்று, அவ்வப்போது எதிர்நோக்கு சுன்னத்தான தொழுகை நோன்புகளை நிறைவேற்றலாம். இருந்தும் கணவரது ஏதாவது தேவைகளுக்கு இடையூறு ஏற்படக்கூடாது என்பதையும் மனதிலிருத்திக்கொள்ள வேண்டும்.

📖 ஒரு பெண் அவவுக்கு ஹஜ் கடமையாகி இருக்கிறது. கணவன் ஹஜ்ஜுக்குப்போக தயாராகிறார். தானும் உடன் வரவா எனக்கேட்டால் பிறகு பார்ப்போம், அடுத்தவருடம் பார்ப்போம் எனக் கடத்துகிறார். இன்னிலையில் அவவின் சகோதரர் ஹஜ்ஜுக்கு செல்ல தயாராகிறார். இது இப்படி இருக்க கணவன் தாமதப்படுத்துவதை ஏற்பதா இல்லை சகோதரருடன் ஹஜ்ஜுக்கு செல்வதா?

✍ நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், "எவர் ஹஜ் செய்ய நாடி விட்டாரோ அவர் அதனை தாமதப்படுத்தாமல் உடனடியாக நிறைவேற்றவும்". எனவும் அவர் ஹஜ் செய்ய நாடியுள்ளாரோ அவர்கள் தமக்கு இடையூறுகள், தடைகள் ஏற்படுமுன் ஹஜ்ஜை உடனடியாக நிறைவேற்றட்டும். எனவும் கூறியுள்ளார்கள். ஹஜ் ஒருவர்மீது கடமையாகிவிட்டால் அவர் அதனை தாமதிக்காமல் நிறைவேற்றட்டும். எக்காரணம் கொண்டும் தாமதிக்கக்கூடாது. கணவர் தாமதப்படுத்துகிறார் என்பதற்காக சன்மார்க்கத்தில் கடமையாக்கப்பட்ட புனித ஹஜ்ஜை தாமதப்படுத்தக்கூடாது. உடன் பிறந்த சகோதரர் தயாராக இருக்கும்போது கட்டாயம் அவருடன் ஹஜ்ஜை நிறைவேற்றலாம். அது மட்டுமின்றி ஹஜ் கடமையானபின் அதனைத்தாமதப்படுத்துவது கணவருக்கு உகந்ததல்ல. சுன்னத்தான ஹஜ்ஜாக இருப்பின் கணவன் கூறுவது சரி. ஆனால் பர்ளான ஹஜ்ஜுடைய விடயத்தில் கணவன் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும். பர்ளான எந்த கடமைகளிலும் கணவன் இடையூறு செய்வதோ தடுப்பதோ கூடாது. அது பெரும்பாவமான விடயமாகும்.

📖 கூட்டு திக்ர் மஸ்ஜிதுகளில் செய்யலாமா?

✍ ஹமைத் அப்துல் காதிர் ஜுலானி, ஹாஜா முஈனுத்தின் சிஷ்தி, ஹஸரத் ஜுனைதுல் ப·தாதி, ஹஸரத் நிஸாமுத்தீன் ரஹ்மதுல்லாஹி அலைஹி போன்ற குதுப்மார்கள், அவ்லியாக்கள் திக்ருக்கென தனி இடங்களை அமைத்துக்கொண்டு, அதற்கு ஸாவியா, தக்கியா, மகாம் என பெயரிட்டு திக்ருடைய ஹல்காக்களை அமைத்து செய்து வந்தார்கள். இந்த நடைமுறை இன்னும் இருந்து வருகின்றது. திக்ர் என்பது ஒரு பொதுவான அமல். அந்தந்த தரீக்காக்களிலுள்ளவர்களின் திக்ர் செய்யும் பாணியே தனி. என்றாலும் அவை ஹதீஸுக்கு மாற்றமானவைகள் அல்ல. இது ஒரு ஆன்மீக பக்குவத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்திருத்தத்தையும் ஏற்படுத்தும் அமல். நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு" அலைஹிவஸல்லம் அவர்களது காலத்திலிருந்தே செயல்படுகிறது. மஸ்ஜிது பொதுவான இடம். அனைத்து மக்களும் பல்வேறு அமல்களில் ஈடுபடும் இடம். அவற்றிற்கு இடையூறு ஏற்படக்கூடாது என்பதற்காக ஆத்மீக உத்தமர்களான ஷேக்மார்கள் தத்தமக்கென தனி இடங்களை அமைத்து தரீக்காக்களுடைய உஸுல்களுக்கிணங்க அமல்களை செயல்படுத்தி வந்தனர். பொது மக்களுக்கு அசௌகரியம் ஏற்படாதிருந்தால் மஸ்ஜிதுகளிலும் திஃருடையஹல்காக்களை நடத்தலாம்.

📖 எனது மனைவியின் தாய் (மாமி) மிகவும் பொருளாதார நெருக்கடியில் இருக்கிறார். அப்படியிருக்க நான் தனிப்பட்ட ரீதியாக அவவுக்கு உதவிகள் செய்து வருகிறேன். இதனால் மாமி திருப்தியுடன் ஏற்றுக்கொள்வதோடு அவவின் தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்கிறார். இந்நிலையில் எனது தாய் அதனை தடை செய்கிறார். இப்படியிருக்க நான் மாமியாருக்கு உதவலாமா கூடாதா?

✒ தேவையுள்ளவர்கள் எவர்களானாலும் உதவிசெய்யவேண்டும். இதனை அல்லாஹுத்தஆலா திருக்குர்ஆனில் வலியுறுத்துகிறான். ஒருவருக்கு உதவுவதை தடுக்க உங்கள் தாயாருக்கு அனுமதியில்லை. தேவையுள்ளவர்களுக்கு உதவுவதை திருக்குர்ஆனும், நபிமொழியும் அதிமுக்கியத்துவம் கொடுத்து அறிவுறுத்துகின்றன. இதனால் தங்கள் தாயாரின் "தடை" ஷரீஅத்துக்கு முரணானதாகும். பொதுவாக ஒரு விடயத்தை மார்க்கம் அனுமதிக்கும்போது அதனை தடைசெய்யவோ, அதற்கு இடையூறு விளைவிக்கவோ எவருக்கும் அனுமதியில்லை. இது அல்லாஹ்வினதும் அவனது தூதரினதும் அறிவுரையாகும். நீங்கள் உங்கள் மாமியாருக்கு தாராளமாக உதவுங்கள். இஸ்லாம் தர்மம் செய்வதை எந்த அளவுக்கு வலியுறுத்துகிறதென்றால், குர்ஆன் கூறுகிறது; "கேட்டுவருபவரை விரட்டாதீர்கள்." அண்ணலார் ஸல்லல்லாஹு" அலைஹிவஸல்லம் அவர்கள் கூறுகின்றார்கள்," அனைத்து மதத்தவருக்கும் தர்மம் செய்யுங்கள்." இப்படியிருக்கும்போது உங்கள் தாயாரின் கூற்று ஷரீஅத்துக்கு விரோதமானதாகும். அதனால் நீங்கள் உங்கள் தாயாரின் கூற்றுக்கு கட்டுப்பட வேண்டியதில்லை. மாமியாருக்கு செய்வதை இரகசியமாகச் செய்யுங்கள். இது உசிதமானதாகும். இன்ஷா அல்லாஹ், ஒருவரின் கஷ்ட துன்பங்களை நீக்குவதால் அல்லாஹ் உங்களின் கஷ்ட துன்பங்களை நீக்குவான் என்பது நபிமொழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை அறிந்த உண்மை

அல்-ஹாஜ் M.B.M.மாஹித்

இருளிலே இருப்பவனுக்கு வெளிச்சம் பெரும் பேறாகும். வறுமையில் உழல்பவனுக்கு வளமான வாழ்வு மேலாகும். நோயிலே தோய்பவனுக்கு சுகவாசம் சாந்தமாகும். இனிமையில் வாழ்பவனுக்கு சகவாசம் இன்பமாகும். அறியாமையுடையோனுக்கு அறிவு பெரும் ஒளியாகும். அடிமைப்பட்டுக் கிடப்பவனுக்கு விடுதலை விமோசனமாகும். ஆனால், வெளிச்சத்தில் இருப்பவன் இருளை நினைப்பதில்லை. வளமாக வாழ்பவன் வறுமையை நினைவு கூர்வதில்லை. சுகத்தோடு வாழ்பவன் நோயைப் பற்றி சிந்திப்பதேயில்லை. துணையோடு உள்ளவன் தனிமையை நாடுவதில்லை. அறிவு பெற்ற பெருமகன் அறிவிலிகளை நினைப்பதில்லை. விடுதலை பெற்று மகிழ்பவன் அடிமைத்தனத்தை விரும்புவதில்லை. இது தான் உலக இயற்கை. ஆனால் இந்த இயற்கையை அல்லாஹ் தன் மக்களுக்கு செயற்கையாகவே காணுகின்றான். அல்லாஹ் அமைத்த அமைப்பு வேறாக உள்ளது.

"அனைவரும் தங்கள் கால் போன போக்கில் போய்க் கொண்டிருக்கின்றார்கள். 'எவர் நேர்வழியில் உள்ளனர் என்பதும் இறைவன் அறிந்த உண்மையாகும்" என அல் குர்ஆன் அழகுற இயம்பும் இந்த இயற்கையை – மனித உணர்வை – நாம் சிந்தித்தல் வேண்டும். மனம் போன போக்கில் மனிதன் தன் வாழ்வை அமைத்துக் கொண்டிருக்கும் தன்மையை இங்கு நாம் காண்கிறோம்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அழகாகச் சொன்னார்கள் "முதுமை ஏற்படுமுன் இளமையை, நோய் வருமுன் சுகத்தை, மரணம் வருமுன் வாழ்வை, வறுமை வருமுன் செல்வத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்." வருமுன் காக்கும் வளமார் முறையை வள்ளல் நபி (ஸல்) அவர்கள் வழிவகுத்தார்கள்.

"தளரும் வயதில் பயன் குறைவு. தாங்கும் கவலை மிக உண்டு. அளந்து காணின் வாழ்வினிலே அருமையுடையது இளமையே. கிளரும் மனதில் மகிழ்வுண்டு. கிட்டும் கவர்ச்சி மிக உண்டு. அளந்து காணின் வாழ்வினிலே அருமை உடையது இளமையே.

சுகத்தோடு வாழும் பொழுது நோயைப் பற்றி நாம் சிந்தித்தல் வேண்டும். நோய் என்பது அல்லாஹ் மனிதனுக்குத் தரும் சோதனையாகும். அது உடம்பு ஸகாத் என்று உலமாப் பெருமக்கள் குறிக்கின்றனர். நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பன செய்தல் வேண்டும்.

தொடர்ச்சி 27ம் பக்கம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுக்கிய முத்துக்கள்

- உலகப்பற்று என்பது ஓர் இருள். அதற்குறிய விளக்கு பேணுதலாக வாழ்வது. பாவம் என்பது ஓர் இருள் அதனை அகற்றுவது "தவ்பா" எனும் விளக்கு. மன்னறை என்பது ஓர் இருள் அவ்விருளை மாற்றுவது "கலிமா"வாகிய விளக்கு. மறுமை என்பது ஓர் இருள் அதனை அகற்றுவது நல் "அமல்" எனும் விளக்கு. சிராத் எனும் பாலம் ஒரு இருள் அதனை அகற்றுவது ஞானம் என்னும் விளக்கு. **அபூபக்கர் (ரலி)**

- கல்வி உள்ளவன் எவனும் தன்னை இறைவன் என்று கூறவில்லை. செல்வம் வைத்திருப்பவன் தான் அப்படி சொல்கிறான். **அபூபக்கர் (ரலி)**

- செல்வம் ∴பிர்அவ்ன் காரூன் ஆகியோரின் சொத்து. கல்வி இறை தூதர்களினுடையது. **அபூபக்கர் (ரலி)**

- நல்ல அறிவிற்கு அடையாளம் இறையச்சம் பாவச்செயலுக்கு அடையாளம் மடமை. **அபூபக்கர் (ரலி)**

- ஒவ்வொரு பொருளிட்கும் சகாத் உண்டு அறிவின் சகாத் மடையர்களில் பேச்சை கேட்டு பொருமையாக இருப்பது. **அலி (ரலி)**

- அறிவுள்ளவனின் நாவு அவன் இதயத்தில் இருக்கும். அறிவற்றவனின் நாவு அவன் வாயில் இருக்கும். **அலி (ரலி)**

- அறிவு அதிகரிக்குமானால் பேச்சு குறைந்து விடும். **அலி (ரலி)**

- கால் தவறினால் காயம் வரும். சொல் தவறினால் வம்பு வரும். **(அலி (ரலி)**

- பேச்சு மருந்துக்கு நிகரானது. அதை அளவோடு பயன்படுத்தினால் அது பயன் தரும். அளவை மீறினால் ஆபத்து வரும். **(அலி (ரலி)**

தொகுப்பு : - ஜாமிஆ மாணவன்
முஹம்மத் மின்ஹாஜ் பின் அஸ்வர்
கல்ஹின்ன.

COMPUTER TYPESETTING BY : DOT NET - NAWALAPITIYA
PRINTED BY : A.J. PRINTERS, DEHIWELA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org